தமிழ் முரசு

3

ஆசிரியர்:
ம.பொ.சிவஞானம்



அறிவிப்பு

'தமிழ் முரசு' இடம் பெயர்கிறது.

புதிய விலாசம் வருமாறு:

1/29, இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை

அன்பர்கள் கவனிக்க.

●

விளம்பர விகிதம்

[ஓர் இதழில் வெளியிட]

அட்டை (வெளிப்புறம்)	ரூ.	100.
அட்டை (உட்புறம்)	ரூ.	75.
புத்தகத்துள் ஒரு பக்கம்	ரூ.	50.
புத்தகத்துள் அரைப்பக்கம்	ரூ.	25.

தமிழ் முரசுப் பதிப்பகம்

திருவல்லிக்கேணி, சென்னை

தமிழ் முரசு

தொகுதி : க | விய - தை - கக
1-2-1947 | பகுதி : ங

பொருளடக்கம்

சென்னைத் தீர்மானம்	தலையங்கம்	... உ
அவசரச் சட்டம்		.... சு
செய்திகள்		.... அ
தமிழ் அரசு	தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்	...கக
தமிழன் சிறப்பு (பாட்டு)	ம. காளிதாசன்	...கஎ
எரித்தது குற்றமா?	'ஞானம்'	...கஅ
உணர்வும் உறவும்	மு. வரதராசன்	....உஉ
சமூகத் துரோகி ?	போ. குருசாமி	....உசு
சென்னைத் தீர்மானம்		...ஙங
மடமையில் ரகங்கள்	டி. கே. சி.	...ஙச
புதிய பார்வை	'பாமரன்'	...ஙசு
தமிழன் - அன்றும் இன்றும்	அ. ச. ஞானசம்பந்தம்	...சய
மதிப்புரை		...சஎ

கதைகளில் வருவன கற்பனைப் பெயர்களே.

விலை 4 அணா

தமிழ் முரசு

" வெற்றி எட்டுத்திக்கும் எட்டக் கொட்டு முரசே !
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே !

சென்னைத் தீர்மானம்

தமிழகத் தலைவர்கள் பன்னிருவர் விடுத்த வேண்டு கோளுக் கிணங்க, தைத் திங்கள முதல் நாள் துவங்கி ஏழு நாட்களைத் தமிழர் நாளாகத் தமிழ் மக்கள் கொண்டாடி யுள்ளனர். காங்கிரஸ், பொதுவுடைமைக் கட்சி, திராவிடக் கழகம் ஆகிய வெவ்வேறு அமைப்பினரும் இவ் விழாவில் கலந்துகொண்டதைப் பற்றிய விரிவான செய்திகள் நமக்குக் கிடைத்துள்ளன. இதிலிருந்து இவ்வாண்டு தைப் பொங்கல் நாள் தமிழ்மக்களை ஒன்றுபடுத்தும் தேசியத் திருநாளாகவும், தமிழகத்தில் தனியரசு வேண்டுமென்ற உணர்வூட்டும் சுதந் திரத் திருநாளாகவும் மாறிவிட்ட தென்பது உறுதியாகிறது.

தமிழர் வாரத்தின் முதல் நாளன்று சென்னை, செயின்ட் மேரி மண்டபத்தில் கூடிய கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ள தீர்மானம், இனி நாம் காணவிருக்கும் புதிய தமிழகத்தின் சரித்திரத்தில் முதலிடம் பெறத்தக்க தாகும். தீர்மானத்தைப் பிறிதோர் இடத்தில் வெளியிட் டிருக்கிறோம்.

சென்னைத் தீர்மானம் தமிழ் நாட்டி லுள்ள முற்போக்கு வாய்ந்த எல்லா அமைப்பினரின் எண்ணங்களையும் எதிரொலி செய்வதாகவும் நாம் நம்புகிறோம்.

தீர்மானத்தின் முதற் பகுதி ஆப்பிரிக்கா, பர்மா, மலேயா, சிங்களம் ஆகிய வெளி நாடுகளி லுள்ள தமிழர்கள்

தங்கள் வாழ்க்கை உரிமைகளுக்காக நடத்தும் போராட்டத்திற்கு ஆசி வழங்கி யிருக்கிறது. இதை நாம் மகிழ்வுடன் வரவேற்கிறோம். "இந்தியர்கள்" என்ற பொதுப் பெயரால் இத்தனை நாள் வரையும் வெளிநாட்டுத் தமிழர் பிரச்சினை அகில இந்தியப் பிரச்சினையாகக் கருதப்பட்டு வந்தது. இதனால் அவர்களுக்கு ஏற்பட்ட பலன் மிகச் சொற்பமே. ஆகவே, வெளிநாட்டுத் தமிழாகளுடன் தமிழ் நாட்டார் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்கள் நடத்தும் போராட்டத்தில் முழுப்பங்கு கொள்ளவேண்டு மென்றும் விரும்புகின்றோம்.

சென்னைத் தீர்மானத்தின் மற்றொரு பகுதி தமிழ் நாட்டின் எல்லையைப் பற்றிய தாகும். தமிழ் நாட்டின் எல்லை குமரி முதல் வேங்கடம் வரை என்று தீர்மானம் வற்புறுத்திக் கூறுகிறது. இந்த எல்லை விஷயத்தில் தமிழர்களிடையே எவ்விதக் கருத்து வேறுமையும் ஏற்படுவதற் கில்லை. இந்தத் தீர்மானத்தின்படி திருவிதாங்கூரில் தமிழர் வசிக்கும் பகுதியும், பிரஞ்சுத் தமிழகமும் புதிய தமிழகத்தோடு இணைப்பதற்கான கிளர்ச்சியைத் தமிழர்கள் உடனே துவக்கியாக வேண்டும்.

"வேறு எவர் தலையீடுமின்றித் தமிழ் நாட்டு அரசியலைத் தமிழரே தயாரிக்கச் சுயநிர்ணயம் வேண்டு" மென்று சென்னைத் தீர்மானம் கூறுகின்றது. இந்தச் சுய நிர்ணயத்தைப் பற்றிச் சிறிது விளக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

"சுயநிர்ணயம்" என்ற சொல்லுக்கு உலக வழக்கிலுள்ள பொருள், "ஒரு நாட்டுக்குத் தனது அரசியல் அமைப்பைத் தானே தயாரிக்கவும் பிற நாடுகளுடன் தனக்கு

இருக்க வேண்டிய உறவு எத்தகையது என்பதைத் தானே நிர்ணயிக்கவும் உரிமை உண்டு" என்பதே யாகும்.

தமிழ் நாடு தனது பெயராலேயே ஒரு தனி நாடு என்பதை விளக்குகின்றது. அதேபோல் தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றின் தனி இயல்பு காரணமாகத் தமிழர் தனி இனமாகின்றனர். தமிழ் நாட்டுக்கெனத் தனி வரலாறும் உண்டு.

எனவே, தமிழருக்குச் சுயநிர்ணயம் என்றால் "தமிழ் நாட்டின் அரசியல் அமைப்பையும் இந்திய மாகாணங்களுடனும் இந்தியாவுக்கு வெளியேயுள்ள பிற நாடுகளுடனும் தமிழ் நாட்டுக்கு எத்தகைய உறவு இருக்க வேண்டுமென்பதையும் தமிழரே நிர்ணயிக்க வேண்டும்" என்றே பொருள்.

சென்னைத் தீர்மானம் மேற்சொன்ன பொருளில்தான் சுயநிர்ணயம் வேண்டுகின்றது. தமிழரின் பிறப்புரிமையாகிய இந்த அரசுரிமையை அடையத் தமிழர் ஒரு பெரும் போராட்டத்தில் ஈடுபடவும் நேரலாம் என்றே எண்ணுகின்றோம். சென்னைக் கூட்டத்தில் அன்று பேசிய திரு. வி. க. "ஒரு லட்சம் தமிழ்ப் படை வேண்டும்" என்று குறிப்பிட்டதும் இதற்காகத்தான் என்பதை மறக்கக் கூடாது.

மேலும் தமிழர் வேண்டுவது 'சோஷலிஸக் குடியரசு' என்பதையும் சென்னைத் தீர்மானம் ஐயத்திற்கு இடமின்றி அறிவித்துவிட்டது. இதன் மூலம் தமிழரசு இயக்கத்தார், தொழிலாளருடனும், விவசாய மக்களுடனும் தொடர்பு பெறவும், அவர்கள் நடத்தும் பொருளாதாரப் போராட்டத்துடன் தமிழரசுக் கோரிக்கையையும் இணைத்துக் கொள்

ளவும் இடம் ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக் குரியதே யாகும்.

'தினசரி,' 'ஆனந்த விகடன்' இரண்டும் சென்னைத் தீர்மானத்தை வரவேற்றுத் தலையங்கங்கள் எழுதியுள்ளன.

"மத்திய சர்க்கார் இந்தியாவின் வடகோடியில் இருப்பதால் தென்கோடியி லுள்ள தமிழர்கள் சிறப்படைய முடிய வில்லை. தென்னாடு இந்தியாவின் முக்கியப் பகுதி என்பதை வட நாட்டாருக்கு உணர்த்த வேண்டிய காலம் வந்து விட்டது" என்று 'தினசரி' கூறுகிறது. இதன் பொருள் எடுத்ததற் கெல்லாம் மத்திய சர்க்காரிடம் மண்டியிட்டுக் கெஞ்சாமல் தங்கள் வளர்ச்சியைத் தாங்களே கவனிக்கக் கூடிய தனியரசு நிறுவ முனையவேண்டு மென்பதே யாகும்.

'ஆனந்த விகடன்' எழுதிய தலையங்கமும் 'தமிழ் நாட்டின் அரசியலைத் தமிழரே தயாரிக்க வேண்டு'மென்ற சுய நிர்ணயத்தின் உட்பொருளை உறுதி செய்கிறது.

திருவாளர்கள் கே. காமராஜர், டாக்டர் சுப்பராயன், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்ற அ. நி. சபையின் உறுப்பினர்களும், மற்றும் பலரும் தமிழ் இனத்தின் சுய நிர்ணய உரிமையை வற்புறுத்தி, அண்மையில் அறிக்கை வெளியிட்டிருந்தது அனைவரும் அறிந்ததே.

இவையெல்லாம் நோக்குங்கால், தமிழ் நாடு தமிழரசு காண முனைந்துவிட்ட தென்பது வெளிப்படை. தமிழ் நாட்டு மாணவர்களும், தொழிலாளர்களும், விவசாயிகளும் புதிய தமிழகத்தைக் காணப் படை திரள வேண்டும். தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள் அனைத்தும் ஸ்தாபன ரீதி யாக ஒன்றுபட்டு ஓர் ஐக்கிய முன்னணியை அமைக்க வேண்டும். சென்னைத் தீர்மானத்தைச் செயலில் நிறைவேற்ற இந்த ஐக்கிய முன்னணியால்தான் முடியும்.

தமிழ் இனத்தவராகிய நமக்குள் பல குறைகள் இருக்கலாம். கடந்த கால நிகழ்ச்சிகள் காரணமாக நம்மில் சிறு சிறு பூசல்கள் நேர்ந்திருக்கலாம். அவை அனைத்தையும் நாம் மறந்து ஒன்றுபட வேண்டும். உள்நாட்டில் பூசலை விளைவிக்கக் கூடிய வகையில் எழுதுவதோ, பேசுவதோ உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். சுய நலம் காரணமாகவோ, சூழ்நிலைக்கு அடிமைப்பட்டோ எவரேனும் நமது சுதந்திர இயக்கத்தை எதிர்க்கவோ, நமது ஒற்றுமையைச் சிதைக்கவோ முற்படுவாரானால் அவர்கள் இனி ஒரு நாளும் வெற்றிபெற முடியாதென்பது திண்ணம்.

சென்னைத் தீர்மானம் செயலில் வருமாக!

- **தமிழனுக்குத் தாய்நாடு தமிழ் நாடே!**
- **தமிழரசு இயக்கமே தமிழரின் தேசிய இயக்கம்!**

அவசரச் சட்டம்

அண்மையில் சென்னை கவர்னர் ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளார். சென்னை மாகாணத்தின் அமைதியைக் காப்பதற்காகவே இந்தச் சட்டத்தைப் பிறப்பித்ததாகச் சென்னை அரசாங்கம் கூறுகிறது. இந்தச் சட்டத்தை நன்கு கவனித்தால் காங்கிரசை நசுக்குவதற்கு அந்நாளில் வைசிராய் பிறப்பித்த பயங்கரச் சட்டங்களை நினைவூட்டுகின்றது. காங்கிரஸ் ஆட்சி நடத்தும் இம்மாகாணத்தில் கவர்னரின் தனிப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடிய அவசரம் என்ன நேர்ந்தது? சட்டசபை கூடும்வரைகூடக் காத்திராமல் கவர்னரின் தனி அதிகாரத்

தைப் பயன்படுத்திய காங்கிரஸ் மந்திரிகளின் நிலைக்கு நாம் இரக்கப்படுகிறோம்.

பொதுவுடைமைக்காரர்களின் தொல்லையைச் சமாளிக்கவே இத்தகைய சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக நம்பப் படுகிறது. இதன் பலா பலன்களைப் பற்றிப் பிறிதொரு சமயத்தில் பார்ப்போம். ஆனால் இந்த அவசரச் சட்டத்தைத் துணையாகக்கொண்டு மக்களின் சார்பாக மக்களால் நடத்தப்படும் எல்லாவித முற்போக்குக் கிளர்ச்சியையும் போலீசார் நசுக்க முற்படுவார்கள் என்று அஞ்ச இடமிருக்கிறது. கடந்த மாதம் 23-ந் தேதி அவசரச் சட்டத்தின் படி காங்கிரஸ் மாணவர்கள் ஊர்வலம் அடித்து நொறுக்கப் பட்டது. நூற்றுக் கணக்கான மக்கள் முன்னிலையில் ஒரு போலீஸ் அதிகாரி தேசியக் கொடியைச் சின்னா பின்னமாகக் கிழித்தெறிந்தார். வீரத் தியாகி சுபாஷ் சந்திர போஸின் பிறந்த நாள் கூட்டங்கள் தடுக்கப்பட்டுள்ளன. இவ்விதமாகக் கம்யூனிஸ்டுகளை அடக்குவதற்காகப் பிறப் பிக்கப்பட்ட அவசரச் சட்டம் காங்கிரஸ்காரர்கள மீதும் காங்கிரஸ் கொடிமீதும் பாய்ந்திருப்பது காங்கிரஸ் மந்திரி சபைக்கே வெட்கந்தரும் ஒரு செயலாகும்.

கவர்னரின் தயவில் அவசரச் சட்டம் பிறப்பிக்கப் பிரதம மந்திரி பிரகாசம் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் அனுமதியைப் பெற்றதாகத் தெரியவில்லை. உண்மையைச் சொன்னால் சென்னை காங்கிரஸ் மந்திரிசபை நாளுக்குநாள் காங்கிரசின் தொடர்பை இழந்து வருகிறது. இன்று அதற்குள்ள உறவு, நம்பிக்கை எல்லாம் குண்டு குண்டாந்தடிகளிடம்தான் ஆம். கோல் பிடித்த கை மாறியது. ஆனால். கோலின் குணம் மாறவில்லை.

செய்திகள்

தமிழர் வார விழா

தைப் பொங்கல் நாள் புத்தம் புதிய வாழ்வின் தொடக்க விழா என்பது தமிழர் மரபு. இவ்வாண்டுத் தைப் பொங்கல் தமிழர் வாழ்வுக்கு—புத்துணர்ச்சி பெற்ற தமிழினத்தின் புது வாழ்வுக்குத் தொடக்க விழாவாக அமைந்தது. சென்னைக் கடற்கரையில் நடந்திருக்க வேண்டிய மாபெருங்கூட்டத்தைச் செயின்ட் மேரி மண்டபத்தில் தமிழரசுக் கழகத்தார் முடக்கிவிட்டனர். இடநெருக்கடியைப் பொருட்படுத்தாமல் தமிழர்கள் பெருந்திரளாக—உணர்ச்சியின் உருவங்களாக அங்கே குழுமியிருந்தனர். தமிழக வரலாற்றிலே இவ்வாண்டுத் தைப் பொங்கல் (14-1-47) நன்னாள் முதலிடம் பெறுவது என்று சொன்னால் சிறிதேனும் மிகையாகாது. பல நூற்றாண்டுகள் தூங்கிக் கிடந்த இனம் எழுச்சி பெறுகிறது, உணர்ச்சி பெறுகிறது என்று சொன்னால், அது பெரிய நிகழ்ச்சி அல்லவா?

தமிழரசுக் கழகத்தார் சென்னையில் ஒரு வாரகாலம் தமிழர் விழாக் கொண்டாடுவதென ஏற்பாடு செய்தனர், தொடக்க விழா 14-1-47-ல் நடைபெற்றது. திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமை தாங்கினார். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ நாடார் வராமையால் தமிழ்ச் சான்றோர் திரு. வி. க. விழாவைத் துவக்கி வைத்தார். திருவாளர்கள் செங்கல்வராயன், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், ரா. பி. சேதுப்பிள்ளை, ம. பொ. சிவஞான கிராமணியார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். சுதந்திர இந்தியாவில், சுதந்திரத் தமிழரசு, வடவேங்கடம் தென்குமரி என்ற எல்லை கொண்ட தமிழகம், தமிழருக்கும் சுயநிர்ணயம், தமிழகத்தில் சோஷலிசக் குடியரசு என்ற கருத்துக்களை வலியுறுத்தி மேலே குறித்த பெரியோர் பேசினர்.

பின்னர், தீர்மானம் தலைவர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஒருமனமாக நிறைவேறிற்று. (தீர்மானமும் தலைமையுரையும் இவ்விதழில் வெளிவந்துள்ளன).

தமிழரசுக் கழகத்தாரும், பிற கழகத்தாரும் சென்னையின் பல வேறிடங்களில் விழாக் கொண்டாடினர். விவரம் முழுவதும் தர மனம் உண்டு; முரசில் இடம் இல்லை.

சென்னையிலும், தமிழ் நாட்டின் பல்வேறிடங்களிலும் தமிழர் வார விழா மிகமிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. எல்லாக் கூட்டங்களிலும் சென்னைத் தீர்மானமே தமிழர் தீர்மானமாக நிறைவேறியிருக்கிறது. இது குறிப்பிடத் தக்கது.

பின்வரும் கழகங்கள் தமிழர் விழாக் கொண்டாடியவற்றிற் சில :

தமிழரசுக் கழகம், சென்னை.
சித்தவைத்தியரளர் கழகம், சென்னை.
சென்னைத் தமிழ்ச் சங்கம், சென்னை.
தமிழ் வித்துவான் சங்கம், சென்னை.
ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம், சென்னை.
தொண்டர் கழகம், சென்னை.
சங்கரலிங்கம் தமிழ்ச் சங்கம், சென்னை.
இளைஞர் நல்லற மன்றம், சென்னை.
மறு மலர்ச்சி மன்றம், சென்னை.
அருணகிரி இசைக் கழகம், நெல்லை.
செந்தமிழ் நூல் நிலையம், புதுவை.
தமிழர் கழகம், திருச்செங்கோடு.
திருக்குறள் கழகம், பொன்மலை.
இலக்கிய வளர்ச்சிக் கழகம், அரிமழம்.
தமிழரசு மன்றம், புதுக்கோட்டை.

இன்னும் பல. விவரங்கள் வெளியிட இயலாமைக்கு 'முரசு' தமிழர்களின் மன்னிப்பை வேண்டுகிறது. அன்புப் பெருக்குண்டு; ஆதரவு மிகவுண்டு. ஆனாலும் இடமில்லை.

திருவிதாங்கூர்த் தமிழ் நாட்டில் தமிழர் திருநாள்

தைப் பொங்கல் (14-1-47) முதல் ஒரு வார காலம் திருவிதாங்கூர்த் தமிழ் நாட்டின் முக்கிய ஊர்களாகிய நாகர்கோவில், அழகிய பாண்டிபுரம், மணவாளக்குறிச்சி, கோட்டாறு, தேரூர், இரணியல், மார்த்தாண்டம் முதலிய இடங்களில் **திருவிதாங்கூர்த் தமிழ் நாடு காங்கிரஸின்** ஆதரவில் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. திருவிதாங்கூர்த் தமிழ் நாடு காங்கிரஸைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலர் இதில் பங்குகொண்டு பேசினர்.

ஒவ்வொரு கூட்டத்திலும் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

(1) தமிழ் நாட்டை ஒட்டியிருக்கும் திருவிதாங்கூரில் தமிழர்கள் பெருவாரியாக வசிக்கும் ஒன்பது தாலுகாக்களை மொழியை அடிப்

படையாக்க் கொண்டு, திருவிதாங்கூர் மத்திய அரசாங்கத்தின் கீழ் ஒரு தமிழ் மாகாணம் உடனடியாக அமைக்கவேண்டும். இதற்காகும் முயற்சியைச் சீக்கிரமாகத் தமிழர்கள் அவர்களுடைய கடமையென எண்ணி ஆரம்பிக்கவேண்டும்.

(2) ஐக்கியத் தமிழகம் அமைக்கப்படுகிற காலத்தில் திருவிதாங்கூர்ச் சமஸ்தானத்தில் அகப்பட்டிருக்கும் தமிழர் பிரதேசமாகிய 2000 சதுர மைல்கள்கொண்ட திருவிதாங்கூர்த் தமிழ் நாட்டைத் தமிழ்நாட்டுடன் சேர்த்துவிடுவதற்குரிய வேலைகளை இப்போதிருந்தே எல்லாத் தமிழர்களும் தொடங்க வேண்டும்.

'**திருவிதாங்கூர்த் தமிழ் நாடு தமிழருக்கே**' என்ற ஆர்வ கோஷம் தி. த. நாட்டில் எங்கும் ஒலித்துக்கொண்டே யிருக்கிறது.

தமிழ் நாட்டுப் பிரிவினை

திருச்சி நித்தியானந்த தேசிய இளைஞர் சங்கத்தின் பதினோராவது ஆண்டு விழா 29-12-46-ல் திரு. நா. அண்ணாமலை பிள்ளை, எம். எல். ஏ., தலைமையில் நடைபெற்றபோது தமிழ் நாடு உடனடியாகப் பிரிக்கப்பட்டுத் தமிழரசு தமிழரால் அமைக்கப்பட வேண்டுமென்று திரு. பழனிவேல் கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கேரளப் பிரிவினை

சமீபத்தில் சென்னை நகரில் நடைபெற்ற அகில கேரள மகாநாட்டில் பிரிட்டிஷ் மலபார், கொச்சி திருவிதாங்கூர்ச் சமஸ்தானங்கள் ஆகிய பகுதிகள் கொண்ட ஐக்கிய கேரள மாகாணம் உடனடியாக நிறுவப்படவேண்டுமென்று அ. நி. சபையைக் கோரியும் அந்த ஐக்கிய கேரளத்தின் அரசியலைத் தற்போதைய அ. நி. சபையிலுள்ள கேரளப் பிரதிநிதிகளே தயாரிக்கவேண்டுமென்று வற்புறுத்தியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாகாணத் தமிழாசிரியர் இரண்டாவது மாநாடு

கல்வி அமைச்சர் கனம் தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் திறந்துவைக்கவும், சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறைத் தலைவர் திரு. ரா பி. சேதுப் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கவும், பச்சையப்பர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் மு. வரதராசனார் அவர்கள் வரவேற்புக் கழகத் தலைவராக இருக்கவும் ஆக, இம் மாநாடு 1947 மார்ச்சு 1, 2 தேதிகளில் சென்னையில் நடைபெறும் என மாநாட்டு அமைப்பாளர்கள் எஸ். எஸ். அருணகிரிநாதர், மயிலை சிவ. முத்து, அன்பு கணபதி ஆகியோர் அறிவிக்கின்றனர்.

தமிழரசு

தே. பொ. மீனாட்சிசுந்தரனார்

தமிழ்த் திருநாள் தமிழர் திருநாளாவது இயல்பே. தமிழ் எனத் தனியே வானத்துக்குள் கிடக்கின்றதா? பழஞ் சுவடிகளில் பற்றி நிற்கின்றதா? புதுச் சுவடிகளில் பொலிந்து விளங்குகிறதா? செந்தமிழ்ச் சுவடிகள் செல்லுக் கிரையானது பழங்கதையல்ல. அவ்வாறு அழிகிறது தமிழா? அழியாத கன்னித் தமிழ் பின் எங்கே இருக்கிறது? தமிழர் உள்ளத்திலே! தமிழர் எண்ணத்திலே! தமிழர் கனவிலே! தமிழர் நனவிலே! தமிழர் நாவிலே! தமிழர் பேச்சிலே! தமிழர் பாட்டிலே! தமிழன் அடிமையாய், பட்டினியாயிருந்தபோது பேசவும் வலியற்றுக் கிடந்தான். ஆகலின் சுவடியில் தேடினோம். நம்மை நாமே பிணமாக்கி நம் கல்லறை என ஏடுகளைப் பொட்டிட்டு வழிபட்டோம். செத்த மொழியா செந்தமிழ்? உயிரற்றவனா தமிழன்? அவன் வாழ்ந்தாலல்லவா தமிழ் வாழும்; தமிழ் நாடு வாழும்? கல்லும் மண்ணும் மணலும் சேருமா நாடு? பள்ளியில் சிறுவன் முக்கோணமாக வரையும் கோடுகளா தமிழ்நாடு? தமிழன் வாழும் இடம் தமிழ்நாடு. சோற்றுக் கலைந்து, கடல் கடந்து அடிமை வாழ்வு வாழ அனுப்புவதா தமிழ்நாடு? ஆகலின், உரிமை ஒளி, இன்ப மழை, தொழில் செய்யும் ஊக்கம், அஞ்சா நெஞ்சம், அறிவிற்பெருகும் இயற்கை வளம்—இவை தமிழனிடம் வாழ வாழத் தமிழ்நாடு வாழும். ஆகவே, தமிழ் விழா என்று மறைத்துச் சொல்லாமல், தமிழர் விழா எனத் திறப்பாகச் சொல்கிறோம். அதனாலன்றோ பாரதியார், 'வாழிய செந்தமிழ்' என்பதோடு அமையாது, 'வாழ்க நற்றமிழர்' என்றும் பாடுகிறார்?

தமிழனுக்கும் வயிறுண்டு; பட்டினி தீர வேண்டும். பொருள்நிலை சிறக்கவேண்டும். தமிழன் வாழ்வு பல துறைகளிலும் அறிவொளி வீச வேண்டும்; ஆராய்ச்சியில் சிறக்க வேண்டும்; இயற்கையின் நுட்பத்தினை அறிந்து, இயற்கை அன்னையின் மடிமீது

தவழ்ந்து, இன்பப் பாலுண்டு திளைத்து உலகப் பரப்பில் விளையாட வேண்டும். அவன் பேசும் மொழி சிறக்க வேண்டும். இக்காலைய கருத்தினை எல்லாம், அதில் அவன் பேசவேண்டும்; எழுத வேண்டும். புதிய புதிய கருத்துக்கள் பால் பொங்குவதுபோல அதில் பொங்க வேண்டும். அவன் பேசி, கூடிவாழும் தமிழரிடையே ஒற்றுமை பலம் ஓங்க வேண்டும். ஆம்! தமிழன் என்று ஓர் இனம் உண்டு. தனியே அதற்கு ஒரு குணம் உண்டு. அந்தக் குணம், மேன் மேலும் சிறந்து உலகினைக் காக்கவேண்டும். தமிழர் அறம் வாழ வேண்டாமா? தமிழர் இன்பம் வாழ வேண்டாமா? தமிழர் பொருள் வாழ வேண்டாமா?

தமிழர் 'பொருள்' என்று கூறுவது எதனை? அரசியல் அமைப்பினை; சமுதாய வாழ்வினை; பொருளாதாரத் திட்டத்தினை. தமிழர் என்றதும், அரசியல் அமைப்பே முன்னிற்கிறது. தமிழன் உரிமையே, தமிழன் உயிர்ப்பு. தன் நாட்டைத் தான் ஆளாத நாள் எல்லாம் வாழாத நாளே. உரிமையைப் பேசாத நாள் எல்லாம் பிறவாத நாளே. நாங்கள் அடிமை அல்ல என்றதும், கடலை எல்லாம், கட்டியானைப் புறப்பட வில்லை தமிழன். பகைமை பாராட்டுவதும் தமிழ் நாட்டுப் பண்பல்ல. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்றே பழந் தமிழனும், புதுத்தமிழனும் பாடிக்கொண்டே வருகின்றனர். உலகம் வாழ, ஈழநாடு வாழ, இந்தியநாடு வாழ என்றே தமிழன் வாழ விரும்புகிறான். 'இமயமும், குமரியும் போல் வாழ்க' என்றே வாழ்த்துகின்றான். இந்த எல்லையை அவன் மறந்ததில்லை.

அதனலேயே தமிழன் தன் நாடு தனி மாகாணமாக வேண்டும் என்று முன்னணியில் வந்து கூறவில்லை. ஆந்திர நண்பரும் அகில மலையாள நண்பரும் அகில கன்னட நண்பரும் பிரிவினைக்கு ஏற்பாடு செய்தபின், தமிழனும் தன் நாட்டமைப்பினைப் பற்றி உள்ளத்தில் ஊறிப் பிறந்த எண்ணங்களைப் பிறர் மனம் புண்ணுகாதவாறு பேசவருகின்றான்.

தமிழராய் வாழ்வருவாரைத் தமிழன் என்றும் தடுத்ததே இல்லை. இனியும் தடுக்கமாட்டான். தன் மொழியைப் பிறர் தலைமேல் சுமத்தி,

அவர்கள் வாய்க்குள்ளும் திருத்தி, காதிலும் காய்ச்சி ஊற்றும் வழக்கம் தமிழன் வழக்கம் அன்று. அதனாலே தமிழ் பொது மொழியாக விளங்குகிறது. தமிழ்நாட்டுப் பெரும்பான்மையினர் மொழி என்ற உண்மையை ஒப்புக்கொண்டால் போதும். அதற்குமேல் வேறோர் உரிமையினையும் தமிழ் மொழி—தமிழ் நாட்டிலும்—விரும்பவில்லை. ஆங்கிலோ இந்தியர்கள் உரிமை பெற்ற இந்தியாவில், உரிமைத் தமிழ் நாட்டில் ஆங்கிலம் கற்பதனைத் தடைசெய்து வாயடைக்கப் போவதில்லை. இஸ்லாமியர் உருதுவில் படிப்பதற்குத் தமிழ் உறுதுணையாகி நிற்கும். சௌராஷ்டிரர் தம் மொழியை வளர்க்க வழியும் காட்டும். ஏன்? அதுதான் தமிழ்ப் பண்பு. இவர்கள் அத்தனை பேரும் தமிழ் நாட்டில் தமிழ்வாழ்வு வாழ வந்தோர். ஆதலின் தமிழர்களே. ஒற்றுமையினைக் குலைக்காத எல்லாப் பண்பாட்டிற்கும் இங்கு உரிமை உண்டு. ஒற்றுமைக் காட்சியிலும் கூட்டுறவு வாழ்க்கையின் பொதுமை இன்பத்திலும் திளைத்தவன் தமிழன்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பல கற்றும், கல்லார் அறிவிலாதார் என்றான் தமிழன். இந்திய நாட்டின் பெருமையை அவனே அறிந்தவனான் எனலாம். இந்தியா விடுதலை பெறச் செக்கிழுத்துக் கல் வெட்டிய சிதம்பரம் பிள்ளையின் காலமுதல் தமிழன் உழைத்து வருகின்றான்.

இந்தியா உரிமை பெறவேண்டும். அந்த உரிமையை நிலைநாட்ட நம் நாட்டுப் பெருமக்கள் முயலுகின்றார்கள். அவர்கள் முயற்சி வெல்க! ஆங்கில அரசாங்கம் செலவு பெற்றுக் கொள்ள நிற்கிறது. 'போய் வருகிறேன்' என்ற வாயைத் திறக்கின்றார்கள். செலவு பெற்றுக் கொண்டபின் அவர்கள் சிறந்து வாழ்க!

இந்தியா பல நாடுகளும் கூடிவாழ வரும் கூட்டுறவின் வழியே ஒற்றைத் துரைத்தனமாகாது, ஒற்றுமைத் துரைத்தனமாக (சமஷ்டியாக) விளங்கப்போகிறது. ஆதலின் அதனுள் அடங்கிய நாடுகட்கும் உரிமை உண்டு. அவற்றிலமையும் துரைத்தனம் தனித்தனியே உண்டு. தமிழ் நாட்டின் துரைத்தனத்தைப்பற்றியும், தமிழ்நாட்டு அரசியலைப்பற்றியும் எண்ணவேண்டி இருக்கிறது. மொழிவகையாக

நாடுகளைப் பிரிக்க வேண்டுமென்று எல்லோரும் முயல்கின்றனர். தமிழன் பேசினால்மட்டும் சிலர் தவறு என்கின்றனர். இந்திய ஒற்றுமையில் அனைத்து உரிமையினையும் சேர்த்துவைக்க இடம் இல்லை. இரண்டோர் உரிமையினை ,நடுவிடத்தில் (சமஷ்டியில்) வைத்துப் பார்க்கக்கூடும். காளடைவில் நடு அமைப்பு உலகம் எங்கும் விளங்குவது போல இந்தியாவிலும் அன்பாய் எதிர்கொள்ளும் வகையில் இன்பமாய் வளர்வதாக. ஆனால், இன்று என்ன? இடையே குழுவமைப்பு (மாகாணங்களின் தொகுதி) ஒன்று வந்துள்ளது. ஆகவே, இது ஒரு புதிய நிலைமை. நம் நாட்டின் நிலையை நன்கு ஆராய வேண்டாமா? இந்தியாவுக்கு அரசியல் அமைக்கையில் "சென்னை மாகாணம்" எனப் பேசிக்கொண்டே போவார்களா? மொழிவகை நாடுகள் எனப் பேசப் புகுந்து **தமிழ்நாடு** எனவும் பேசுவார்களா? உடனடியாகப் பேசாமல் போனாலும், பின்னேனும் தமிழ்நாடு எனப் பேசத்தானே வேண்டும்? ஒவ்வொரு நாட்டின் அமைப்பும் அந்தந்த நாட்டின் சட்ட சபையிலே நிறைவேற வேண்டும் என்ற கொள்கையைப் பெரியோர் வற்புறுத்துகின்றனர். இந்தச் சுயநிர்ணயத்தினை—தன் அமைப்பினைத் தான் அமைக்கும் நாட்டுரிமையினை—அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர்.

இப்போதேனும் நம் அரசியல் அமைப்பினைப்பற்றி எண்ண வேண்டாமா? பொருளாதார நிலையை உள்ளவாறறிந்து எதிர்கால வாழ்வுக்குத் திட்டம் கோல வேண்டாமா? ஆந்திரர் இந்த வகையில் எல்லாம் முயலவில்லையா?

தமிழ்நாட்டெல்லை

இந்நாளில் நாடு என்பது நிலத்தினைப் பொறுத்தது. துரைத்தனமும் பண்பாடும் காற்றிலா பறக்கும்? வாழும் இடத்தினைச் சுட்டவேண்டாமா? தமிழ்நாடு என்பதன் எல்லை என்ன? தெலுங்கரும் பிறரும் இதனைப்பற்றி முன்னரே எண்ணிவரவில்லையா? எல்லையை வரையறுப்பது பெரியதொரு சிக்கல். இரவும் பகலும் எப்போது பிரிகின்றன? பகல் இரவாக மெல்ல மாறுவது போல

மொழிவழங்கும் நாடுகளும் மெல்லப் படிப்படியாக மாறும். மொழி பேசும் மக்களின் விருப்பத்தினையே அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும். பிற காரணம் கருதி விருப்பம் இல்லாதவரை நம் நாட்டிற்குள் வற்புறுத்திவைப்பது நமக்கு நாமே தீங்கு தேடுவதாகும். உலகம் முழுதும் இந்த உண்மையைத்தான் காட்டுகிறது. எல்லைப் புறச் சண்டைகளே பெரும் போராக முற்றுகின்றன. அல்சாஸ், லொரைய்ன்—டான்சிக் என்ற இரண்டு எடுத்துக்காட்டுப் போதாதா? நம்மை நாமே கேட்டுப் பார்ப்போம். ஆந்திர நண்பர்கள் சென்னையைத் தெலுங்கு நாட்டிற் சேர்ப்பது என்றால் உடலும் நரம்பும்இரத்தமும் துள்ளிக் குதிக்க வில்லையா? ஆகவே அத்தகைய பகைத்தீயை உள்ளுக்குள்ளேயே வளர்க்சாமல் வடவேங்கடம் தென்குமரி என்ற எல்லையில் இன்றும் விளங்கும் தமிழ் நாட்டினை வரையறை செய்தல் வேண்டும். நாட்டிலிருந்து நாடு ஆள் திருடிப் பயனில்லை. ஆள் அல்ல வேண்டுவது; ஆளின் ஊக்கம் வேண்டும். தப்புக் கணக்கெழுதி ஆள்மாருட்டம் செய்ய வேண்டாம். ஒப்புக் கொள்ளச் செய்யுமாறு மெய்ப்பிக்க வேண்டும். அது தவிர வேறுவழியில்லை. கன்னடம், மலையாளர், தெலுங்கு இவற்றின் எல்லையிலே எல்லாம் தமிழ் வழங்குகிறது. உண்மையில் தமிழ் வாழ்வு வாழ விரும்புவர் யார் எனப் பெரியார் சிலர் கண்டறிய வேண்டும். இருபது லட்சத்திற்கு மேல் மலையாள அரசியலில் வாழ்வார் திருவிதாங்கூர்த் தமிழ் நாட்டு மக்களாவர். அவர் உள்ளம் குளிர எல்லை வகுக்க வேண்டும். இனம் என்ற பிரிவு எதனுல் வரையறுக்கப் பெறுகிறது? மனத்தால். பிறவற்ருல் அன்று. தமிழன் என்ருல் தமிழன்; இல்லை என்ருல் இல்லை. மனத்திற்கு மாறுபோக வழி இல்லை. இதனை உணர்ந்தால் எல்லாம் இனிதாகும். தமிழன் என யாரும் வாழவரலாம்; இங்கேயே குடியேறித் தலைமுறை தலைமுறையாக வாழமுற்பட்டால் தள்ளுவார் யார்? அவர்கள் தமிழருக்கு உயிராவார்கள். வந்து போவார் மட்டுமே தமிழர் அல்லர் என்போம். அவர்களுக்கும் எல்லாம் உரிமையும் உண்டு, சுரண்டற் கொள்கையை மறப்பார்களாளுல்!

தமிழகத்திற்கு வெளியே தமிழர் நிலை

தமிழர் தென்னுப்பிரிக்காவில் சுனியிலும் பிறவிடத்திலும் வேலை செய்யச் சென்றனர். பிஜித்தீவில் கரும்பு வேலைக்கோடினர். மலேயாவில் ரப்பர் தோட்டததில் வாடுகின்றனர். இலங்கையில் தேயிலைத் தோட்டத்தில் உரிமையற்று உழைக்கின்றனர். இவர்களுக்கு உதவ வேண்டாமா? என்ன உதவி செய்யமுடியும்?

உரிமையோடு தமிழ்நாடு வாழ்ந்தால்தான் தமிழன் எங்கும் தலை நிமிர்ந்து செருக்கி நடத்தல் கூடும். இல்லை என்றால் கூலி என்றே இகழப்படுவான். பிழைப்புக்கென வெளிநாடு போகும்படி செல்வ நிலைமை கெடுவானேன்? தமிழ் நாடு, தமிழனது பொது உடைமை அல்லவா?

எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் இந் நாட்டு மன்னர் என்பதோடு நில்லாமல் பொருளாதார வாழ்விலும் எல்லாரும் ஓர் நிறை என்ற ஒற்றுமை தோன்ற வேண்டும். ஆந்திரர் தம் நாட்டை ராஷ்ட்ரம் (தேசம்) என வழங்குகின்றனர். ராஷ்ட்ரேதரத் தெலுங்கரைப்பற்றியும் பேசத் தொடங்கிவிட்டனர். இது தேசபக்தி என்றே வாழ்த்துகின்றனர் பலரும். தேசத் துரோகம் எனச் சுட்டிக்காட்டி முணு முணுப்பவரையும் காணோம்.

ஆந்திர நாட்டினர் பொருளாதார நிலைமைக்காகச் சென்னையை விரும்புகின்றனர். மலையாளிகள் திருவிதாங்கூர்த் தமிழ் நாட்டைக் காதலிக்கின்றனர்.

ஆனால் மனமில்லாதவர்களைத் தம் நாட்டில் புகுத்திவைப்பதால் வரும் கேட்டினை உலக வரலாறு எடுத்து முழங்குகிறது. அறிவிற் சிறந்த இவர்கள் காதில் இது விழாதிருக்க முடியாது. பகையின்றி வாழ முயல்வதே நம் வளர்ச்சிக்கு உயிர் கொடுக்கும். மலையாளமும், ஆந்திர நாடும், தமிழ்நாடும், கன்னடநாடும் மொழிவழியே வாழ்வையும் கலையையும் வளர்க்க வேறு பிரிந்தாலும் பொருளாதார நிலைக்காகப் பல வகையிலும் ஒன்று சேரத்தானே வேண்டும்? மலையும் ஆறும் கடலும் நம்மை ஒன்றாக்குகின்றன. முதலாளிக் கொள்கையை மறந்தால் இத்தகைய பிசகு எண்ணங்களுக்கு இடம் இல்லை. ஆதலின் வீண் பகையும் வீண் அச்சமும் வேண்டாம். அவரவர் விருப்பப்படி அவரவர் பிரிக. மக்கள் மனத்தினைக் கவர நினையுங்கள். எல்லாம் நன்மையாக முடியும். நாடெல்லாம் வாழக் கேடொன்றும் இல்லை.

தமிழர் திருநாளன்று நிகழ்த்திய தலைமையுரையின் சுருக்கம் மேலே காண்பது—ஆசிரியர்

தமிழன் சிறப்பு

கா. ம. காளிதாசன்

தமிழனென்று கணகணென்று சொல்
தலைநிமிர்ந்து விழிசொலிக்க நில்
தமிழகத்தின் உரிமை எங்கட்கே
தனிமையென்று முரசொலிக்கச் செய் (தமி)

மணிகொழிக்கும் கடல் வளத்திலும்
மலையளிக்கும் பொருள்வளத்திலும்
உணவளிக்கும் நிலவளத்திலும்
உடலுழைப்பி லும்செழித்தவன் (தமி)

செழியன் சேரன் சோழனாட்சியில்
செல்வமல்கிக் கல்வி பொங்கியே
பொழியும்இன்ப வாழ்வுதுய்த்தவன்
போர்முகத்தில் புலியை யொத்தவன் (தமி)

அச்சிலிட்ட வச்சிரச்சிலை
அழகும் வலியும் அமைந்த மேனியான்
மிச்சம் வைக்கும் இச்சையற்றவன்
வேண்டுவோர்க்கு நல்கும் ஈகையான் (தமி)

திறம் விளங்கும் செயல்கள் கற்றவன்
திரை கிழிக்கும் கலம் விடுத்தவன்
அறம் வளர்க்கும் " குறள் " படைத்தவன்
ஆன்மஞான மேன்மை பெற்றவன் (தமி)

எரித்தது குற்றமா?

"ஞானம்"

சிலப்பதிகாரக் கதையில் குற்றமற்ற கோவலனைக் கொன்றமைக்காகப் பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்விடுகின்றான். "மானம் படவரின் உயிர் வாழார் பாண்டியர்" என்ற செம்மொழியை மெய்ம்மொழி யாக்கியது அவனது வீரச் செயல்.

தனக்கு இன்னல் விளைத்த வேந்தன் இறந்துபட்ட பின்னரும்கூடக் கண்ணகிதேவியாரின் சீற்றம் தணியவில்லை. பாண்டிமாதேவியின் வேண்டுகோளும் பலனளிக்கவில்லை.

நெடுஞ்செழியனின் கொடுஞ்செயலால் கண்ணகியின் உள்ளத்தே கனன்றெழுந்த தீயானது உடலெல்லாம் பரவி நின்றது. "அரசன்தானே அழிந்தான்! அதோடு விட்டேனா? அவனது மதுரையை இதோ நானே அழிக்கின்றேன்" என்று வஞ்சினங்கூறி மதுரை நகரைத் தீக்கிரையாக்கினாள். பகை மன்னரால் எல்லாம் அழிக்க முடியாத பாண்டிநாட்டின் தலைநகரைப் பத்தினிப் பெண் அழித்தாள்.

"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்றார் பாரதியார். ஆனால் இளங்கோவடிகள் கண்ட கண்ணகி, கோவலனாகிய ஒருவனைக் கொன்ற கொடுமைக்காக ஒரு நாட்டையே அழித்து முடிக்கிறாள்.

அரசன் ஒருவன் செய்த கொடுமைக்காக ஒரு நகரத்தையே நாசமாக்கி, அதில் வாழும் மக்களுக்குக் கேடு சூழ்வது நீதியோ எனக் கேட்கலாம். இதற்குக் கண்ணகி தேவியே பதிலளிக்கிறாள்.

மதுரையைத் தீக்கிரையாக்கத் திடங்கொண்டதும் கண்ணகி தன்னைப் பார்த்து நிற்கும் மதுரை மாந்தரை நோக்கி,

நான்மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்
வானக் கடவுளரும் மாதவரும் கேட்டமின்
யானமர் காதலன் தன்னைத் தவறிழைத்த
கோனகர் சீறினேன், குற்ற மிலேன்.

"மதுரையம்பதியில் வாழும் பெண்களே, ஆண்களே, வானுலகத் தேவர்களே, சான்றோர்களே! கேளுங்கள். என் அன்புக்குரிய காதலரைக் கொல்லுவித்த பாண்டியன் நெடுஞ்செழியனின் ஆட்சிக்கு உட்பட்டது இம்மதுரை. ஆகவே, இந்நகர்மீது யான் சீற்றங் கொண்டேன். என்மீது குற்றமில்லை" என்று கூறுகின்றாள்.

'கோன் நகர்' என்பதிலுள்ள நுண்பொருள் அரசியல் அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு உரியதாகும்.

கண்ணகி மதுரையை எரித்ததற்குக் காரணம், நெடுஞ்செழியனின் ஆட்சிக்கு அவ்வூர் உட்பட்டிருந்ததே யாகும்.

நெடுஞ்செழியன் தனிமனிதன் அல்லன்; பாண்டி நாட்டின் மன்னன். மன்னனுக்குள்ள அதிகாரத்தைக் கொண்டே கோவலனைக் கொல்லுவித்தான். இந்த அநீதிக்குப் பின்னரும் அம்மன்னனது ஆட்சியே மதுரையில் நிலவி வந்தது.

அரசனானவன் எப்படித் தன் ஆட்சியை நீதி வழுவாமல் நடத்தக் கடமைப்பட்டவனோ அதே போன்று குடிகளும் தங்கள் அரசன் நீதிவழுவாமல் பார்த்துக்கொள்ளக் கடமைப்பட்டவர்கள்.

ஆனால், மதுரை மக்களோ தங்களுக்குரிய இந்த அரசியற் கடமையை நிறைவேற்றத் தவறிவிட்டனர். சோழ நாட்டுப் பிரஜையான கண்ணகி அல்லற்பட்டு ஆற்றாது மதுரை வீதி வழியே அழுது சென்றபோது,

'களையாத துன்பம் இக்காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது இதுவென்கொல்'

என்று புலம்பி, இருந்த விடத்தி லிருந்தே அவள்பால் அனுதாபம் காட்டினரேயன்றித் தங்கள் அரசனை அணுகித் திக்கற்ற அவளுக்கு இழைத்த தீமைக்குக் காரணம் கேட்டுக் கழுவாய் தேடினார்க ளில்லை.

அறம் பிழைத்த மன்னனுக்கு அஞ்சி வாழும் மதுரைக் குடிமக்களின் நிலை கண்ணகியின் மனத்தைப் புண்படுத்தி யிருக்க வேண்டும்.

“என் கணவனைக் கூரிய வாளால் கொல்லுவித்த பாண்டியன் ஆட்சியில் பத்தினிப் பெண்டிருண்டா? சான்றோருண்டா? தெய்வமுண்டா?” என நிந்தித்துரைத்த அவளது வாய்மொழியே இதற்குச் சான்றாகும்.

இன்றைய அரசியல் உலகிலும் கண்ணகியின் கூற்றுக்கு ஆதாரமுண்டு. ஜெர்மனியில் விமானப் படையெடுப்பு நிகழ்த்துமுன்னம் நேசநாட்டு அதிகாரிகள் என்ன சொன்னார்கள் தெரியுமா? “ஜெர்மன் மக்களே! எங்கள் பகை ஹிட்லரே யொழிய நீங்களல்ல. நாங்கள் அழிக்க விரும்புவதும் நாஸி ஆட்சியையே; ஜெர்மன் நாட்டையன்று. ஆகவே, ஜெர்மானியர்களாகிய நீங்கள் உங்களையும் உங்கள் நாட்டையும் எங்கள் விமானப் படையெடுப்பி லிருந்து காப்பாற்றிக்கொள்ள விரும்பினால் ஹிட்லரை விரட்டுங்கள்,

அவன் ஆட்சியைப் புதையுங்கள் " என்று விமானங்களி லிருந்து எறிந்த பிரசுரங்களிலும் ரேடியோவிலும் எச்சரித் தனர்.

இதன் நுட்பமென்ன ? பிற நாட்டவருக்குத் தீமை செய்யும் ஹிட்லர் ஆட்சியின்கீழ் அடங்கிவாழ ஜெர்மானியர் விரும்புவதாயின் ஜெர்மனியை அழிப்பது கடமை. அதனால் மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளுக்குத் தாங்கள் பொறுப் பாளிகளல்ல. ஏனெனில் அது ' ஹிட்லர் ஜெர்மனி ' என் பதே நேசநாட்டினர் வாதம்.

இதைத்தான், கண்ணகியும் கூறுகின்றாள்: "கோன் நகர் சீறினேன் ; குற்ற மிலேன் " என்று.

எந்த ராஜ்யத்தில், ஜனங்கள தங்களுடைய தேகத் தைத் தவிர, மற்றெல்லாவற்றையும் பொதுவுடைமையாகக் கருதிக்கொண்டு அதன்படி வாழ்க்கையை நடத்து கிறார்களோ, அந்த ராஜ்யத்தில் வழக்குகள், விசாரணைகள் ஒன்றும் இரா. எங்களுடைய பணம், எங்களுடைய குழந் தைகள், எங்களுடைய உறவினர் என்று எந்த இடத்தில் பேசப்படுகிறதோ அந்த இடத்தில், ஏதாவது ஒரு விதமான சச்சரவு இருந்து கொண்டுதானிருக்கும்.—சாக்ரட்டீஸ்.

உணர்வும் உறவும்

மு வரதராசன்

சிறு பெண்கள் சிலர் கூடி மணலில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் புன்னைக் கொட்டைகளை வைத்துக்கொண்டு விளையாடினார்கள். காசு முதலியவை களை மணலில் அழுத்தி மறைத்துப் பிறகு மணலைத் தோண்டி எடுத்துப் பார்ப்பதில் சிறுவர்களுக்குத் தனி இன்பம் உண்டு. அழித்தல், ஆக்கல் என்னும் ஆற்றல் தங்களிடம் இருப்பதை அப்போது அவர்கள் உணர்கிறார்கள் அல்லவா? அதுதான் இன்பத்துக்குக் காரணம். பொய்ம் மைகளை வைத்து விளையாடுவதில் காக்கும் ஆற்றல் இருப் பதை உணர்ந்து மகிழ்கிறார்கள். படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலில்தான் குழந்தைகளும் இன்பம் காண்கின்றன.

இப்படி விளையாடி வந்த புன்னைக் கொட்டைகளில் ஒன்றை மறந்துவிட்டார்கள். அந்தக் கொட்டை மணலி லேயே அழுந்திச் சில நாள் கிடந்தது. அதனுள் கிடந்த உயிர் வாளா இருக்குமா? அது வெளிப்பட்டது. புன்னைக் கொட்டை புன்னைச் செடியாகித் தோன்றியது.

விளையாடிய சிறுமியர் பலருள் ஒருத்தி அந்த விந்தை யைக் கண்டு வியந்தாள். படைத்தலும் மறைத்தலும் ஆகிய விளையாட்டுக்கு உரிய புன்னைக் கொட்டை, இப்போது காத்தல் தொழிலுக்கு உரிய இளஞ் செடியாக விளங்கியது. சிறுமியோ இளந் தாயாகி விட்டாள்; அந்தச் செடியின்மேல் கொண்ட அன்புதான் அவள் மனத்தைத் தாய்மனம் ஆக்கி விட்டது.

சிறு செடி வளர்ந்து ஓங்கும் என்று கனவு கண்டாள்; வளர்க்க முனைந்தாள்; அன்பு சொரிந்தாள்!

அந்தப் புன்னைச் செடிக்குத் தண்ணீர்மட்டும் ஊற்றினால் போதும். ஆனால் அது யார் செய்யும் செயல்? அதைச் செடி என்று அறிந்த மூளை உடையவர் செயல். சிறுமியோ தன் அன்பை முன்னே செலுத்தி உணர்ந்து வளர்த்தாள். தன் தாய் தன்னை வளர்த்த முறை—நெய்யும் பாலும் ஊட்டித் தன்னை வளர்த்த முறைதான் சிறுமியின் உணர்வில் நின்றது. தானும் அந்த இளஞ் செடியை அவ்வாறு வளர்க்க முனைந்தாள்.

இளம் புன்னைச் செடிக்கு நாள்தோறும் நெய்யும் பாலும் கிடைத்து வந்தன; தண்ணீரும் ஒவ்வொரு வேளை கிடைத்திருக்கும்.

பல ஆண்டுகள் கழிந்தன செடி மரமாக ஓங்கியது. சிறுமி மங்கையாகப் பொலிந்தாள். திருமணம் நடந்தது. இல் வாழ்க்கை அமைந்தது. குழந்தைச் செல்வமும் வாய்த்தது. இந்தக் குழந்தை ஒரு பெண் குழந்தைதான்.

இந்தக் குழந்தை வளர்ந்து சிறு பெண் ஆனது. பெற்ற தாய்க்கு இந்தச் சிறு பெண் முதல் குழந்தையா? இரண்டாம் குழந்தையா? உணர்வு உலகம் கண்டவர்கள் உண்மையைச் சொல்லுவார்கள். இந்தச் சிறு பெண் அவளுக்கு இரண்டாம் குழந்தைதான். அவள் மனம்—அன்பு நெஞ்சம்—வளர்த்த முதல் குழந்தை புன்னை மரம் தானே!

இதை அந்தத் தாயே ஒருநாள் சொல்லிவிட்டாள்,

ஒருநாள் அவளுடைய சிறு பெண் அழுதாள்; நெய்ச் சோறும் பாலும் உண்ணாமல் தொல்லை கொடுத்தாள். அப்போதுதான் சொன்னாள். "அம்மா! நீ இப்படிப் பாலும் நெய்ச்சோறும் உண்ணாமல் அழுகின்றாயே! உன்னால் எனக்கு எவ்வளவு தொல்லை! உன் அக்கா ஒருநாளும் அப்படிச் செய்தது இல்லையே" என்றாள்.

"யாரம்மா அக்கா?" என்று மகள் கேட்டாள். "இதோ இருக்கின்றதே இந்தப் புன்னை மரம்தான். இதுதான் நான் முதலில் வளர்த்த குழந்தை. நாள்தோறும் என் கையால் நெய்யும் பாலும் ஊட்டினேன். ஒரு நாளும் மறுக்கவில்லை; அழவில்லை; கோபம் வரவில்லை. எனக்கு ஒருநாளும் தொல்லை கொடுக்காமல் உண்டு வந்தது. நீமட்டும் இப்படிச் செய்கின்றாயே" என்றாள் தாய்.

மகளின் மனத்தில் அரைகுறையாக இந்தச் செய்தி பதிந்தது. இன்னும் சில ஆண்டுகள் கழிந்தன. அவளுடைய அறிவு வளர்ந்தது. அப்போது புன்னை குழந்தையாகப் பிறந்த கதையையும் வளர்ந்த வரலாற்றையும் தாய் விளக்கினாள். மகளுக்கு உண்மை விளங்கிவிட்டது.

மகளும் உற்ற வயது அடைந்தாள். வாழ்க்கை தொடங்கினாள்.

ஒரு நாள் தன் காதலனோடு அந்தப் புன்னை மரத்து நிழலில் இருந்து பேசிக்கொண்டிருந்தாள். பேச்சில் விளையாட்டும் நகைச்சுவையும் பெருகிவிட்டன. காதல் பேச்சு, காதல் விளையாட்டு இவற்றுக்கு இடையே திடீரென்று காதலியின் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி தடையாக எழுந்தது. பேச்சும் மகிழ்ச்சியும் தடைப்பட்டன.

காரணம் வேறொன்றும் இல்லை. நிழலில் இருந்த அவள் நினைவு நிழல் தந்த புன்னை மரத்தின்மேல் சென்றது. இளமை முதல் தன் உள்ளத்தில் ஊறிவந்த உறவு முறை முன்வந்து நின்றது.

புன்னைமரம் தமக்கை; தான், தங்கை—இதை எப்படித்தான் மறக்க முடியும்? ஒருநாள் பாடமா?

தமக்கையின் எதிரில் காதல் பேச்சும் விளையாட்டும் நிகழ்த்தத் தங்கைக்கு மனம் இல்லை. 'என்ன செய்தோம்' என்று நாணம் அடைந்தாள்.

இதைக் காதலனுக்குத் தோழியைக் கொண்டு தெரிவித்தாள்.

இந்தக் கருத்து ஒரு பழம் பாட்டில் உள்ளது. பாடிய புலவர் யார் என்று தெரியவில்லை. தமிழ் நாடு பெயரை மறந்துவிட்டது. ஆனால், நல்ல காலம், அந்தப் பாட்டை மறக்கவில்லை.

"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்த்தது
நும்மினும் சிறந்தது நுவ்வை யாகும்" என்று
அன்னை கூறினள் புன்னையது நலனே;
அம்ம நாணுதும் நும்மொடு நகையே......
(நற்றிணை—172).

சமூகத் துரோகி - ?

போ. குருசாமி

கதிரவன் மறைந்தான்; வானத்தின் மேற்குத் திசை உலகினர் மனத்தை ஈர்த்தது—செக்கர் வானம் மாலைக் காலத்தை அணி செய்தது. மலையடிவாரத்தில் மேயச் சென்ற மந்தைகள் ஊர் திரும்பின. மாட்டோடு மல்லுக் கட்டி நாளெல்லாம் உழைத்த உழவர்களும் வீடு திரும்பினர். அவர்கள் மேனியில் வடிந்த வியர்வையெல்லாம் இரத்தம்தான் என்பதைச் செக்கர் வானம் காட்டிற்று என்று உணர்ந்துவிட்ட கொக்குகள் நிற்க மனமில்லாமல் கரங்களால் மார்பிலடித்துக்கொண்டு முடிவு தெரியாத இடத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்தன.

ஊர்ப்புறத்தே நெடுஞ்சாலையில் தள்ளாடி நடமாடும் ஒருவன் நகர்ந்து நகர்ந்து கிராமத்துக்குள் வருகிறான். கைகள் ஊஞ்சலாடுகின்றன; தோள்பட்டையோடு பிணைக்கப் படாமல் இருப்பதுபோலத் தொள தொளவென்று அவை ஆடுகின்றன. கால்கள் பின்னிப் பின்னி அவன் சடலத்தை ஆட்டிவைக்கின்றன. குடிவெறியாக இருக்கலாமோ? இல்லை.

அவனைக் கடந்து வந்த ஓர் இடையன்

கஞ்சிக் கவலை ஐயா
கடன்காரன் தொல்லை ஐயா
நெஞ்சுக் துயரமையா
நொந்தகுடி ஆனேனையா

என்று பாடிக்கொண்டு போகிறான். இடைச் சிறுவனுக்கென்ன கவலை! எருமை மாட்டு முதுகுமீது அமர்ந்து

செல்லும்போது, குதிரைச் சவாரி செய்யும் அரசிளங் குமர னாகவே தன்னைப்பற்றி எண்ணிக்கொள்கின்றான். உழைப் பற்று உணவற்று உணர்விழந்து தள்ளாடும் கந்தனைப் பார்த்த போது பாடிய அதே வாய், சென்னையிலிருந்து விடுமுறைக் குக் கிராமத்தை நாடி வந்திருக்கும் பண்ணையார் மகன் சந்திரனைக் கண்டதும்,

சாலையிலே போறவரே
சந்திரரே என்கொழுந்தா—நீரு
இங்கிலீசு படிக்கப்போயி—நான்
என்ன சொல்லிக் கூப்பிடட்டும்

என்று நையாண்டியாகப் பாடுகிறது. கவலை கவடுகளற்ற அவன் உள்ளத்திலே சாலையில் போகிறவர்கள் அத்தனை பேரும் இடம் பெறுகிறார்கள். கந்தனுக்கு உதவ அவனிடம் காசும் இல்லை; சந்திரனிடம் சென்று பேசிக்கொண்டிருக்க அவனுக்குச் சந்தர்ப்பமும் இல்லை. என்றாலும்கூடக் கந் தனை கண்டவுடன் அவன் உள்ளக் கண்ணாடியில் ஒரு துன்ப உருவம் நிழலிடுகிறது; துயர உணர்வு பாடலாய் மலர்கிறது. சந்திரனைக் கண்டவுடன் அதே கண்ணாடியில் அவனுடைய இளமைத் துடிப்பும் அவன் பருவ விளையாட் டும் நிழலிடுகின்றன. உடனே இடைச் சிறுவனுடைய உள்ளத்திலே ஒரு காதல் கதை உருவாகிறது. பாட்டுப் பிறக்கிறது; பாடுகிறான். கவலையற்ற வாழ்வு!

கந்தனுக்கு நாளைக்கு வரப்போகும் நிலையும் தெரியாது; சந்திரன் எங்கே காதல் நாடகம் ஆடினான் என்பதும் தெரி யாது. உருவத்தைப் பார்த்து உள்ளத்து நிலையைச் சித் திரம் தீட்டும் கவிஞன் அவன்—வெறும் நாட்டுப்புறத்து இடையன்தான்.

சரி, கந்தனைப் பார்ப்போம். தள்ளாடித் தள்ளாடி எவ்வளவுதான் நடக்க முடியும்? அதோ, ஒரு மரத்தடியில் அமர்ந்து அடிமரத்தில் சாய்ந்து விட்டான்.....

2

"தற்கொலை முயற்சி பெரும் பாவமான காரியமாகும். தற்கொலை செய்துகொள்ளுகிறவர்கள்தான் பேய்களாகத் திரிகிறார்கள். ஆண்டவனுடைய விருப்பத்துக்கு எதிராகத் தங்களை மாய்த்துக் கொள்கிறவர் படுநரகில்...." என்று புராணப் பிரசங்கி விளாசு விளாசென்று பேசிக்கொண்டிருக்கிறார். ஏதோ கதையின் நடுவிலே தற்கொலை பற்றிய பௌராணிகரின் விளக்கம். பேயுலக ஆராய்ச்சி செய்து விட்டதுபோலப் பேசுகிறார்! தற்கொலை செய்துகொள்ளாமல் உலகத்து மக்களையெல்லாம் மனித உருவிலிருந்தே பிடித்தாட்டும் பேய்கள் எத்தனையோ உண்டு என்பதைமட்டும் விளக்க அவருக்கு மனமில்லை. மனிதப் பேய்களைப் பற்றிச் சொன்னால் பெரிய இடத்துப் பொல்லாப்பு.

சென்னையிலும் இத்தகைய புராணப் பிரசங்கங்கள் நடப்பதுண்டு. இரவு ஒன்பது மணிக்குக் கதை தொடங்கும். பதினொன்று, பன்னிரண்டு மணி வரையிலும் கதை நடக்கும், 'சத் விஷய'ங்களில் ஆர்வங் கொண்டவர்கள் அங்கே கூடியிருப்பார்கள். கதை நடக்கும்; வெறும் கதையல்ல. சரித்திரம் சொல்லும்போதே சாத்திரம் வரும். அதுமட்டுமல்ல. மறுமையில் வீட்டின்பம் எய்த வேண்டுமாயின் என்னென்ன செய்யவேண்டுமென்ற அறிவுரைகளும் பிறக்கும். அந்தக் கூட்டத்தாருக்கு அவை வேண்டியவைதான்.

காட்டுப் புறத்திலிருந்து பிழைப்பை நாடிச் சென்னைக்கு வந்த கந்தனுக்கு அங்கே என்ன வேலை? அவனும் ஒரு பக்கத்தில் நின்று கேட்டுக்கொண் டிருந்தான். திடீரென்று நடுவே புறப்பட்டுப் போகலானான். அப்போது கூட்டத்தி லிருந்து எழுந்து ஓடப் பார்த்த ஒரு சிறுவனை அவன் பாட்டி இழுத்து வைத்து, 'புண்ணியக் கதை கேட்க வந்து, நடுவிலே போகலாமோ? பாவமாச்சே' என்று முணு முணுத்தாள்.

கந்தனுக்கு அதெல்லாம் தெரியாது. ஏதாவது இரண்டு காசு கிடைக்காதா என்று எண்ணி அங்கே வந்தான். சத் விஷயங்களில் சத் ஜனங்களோடு கலந்து மோட்ச சாம்ராஜ்யத்தை அடைய எண்ணிய அந்தக் கூட்டத்தில் அவனுக்குப் பிச்சை இடுவார் யாரும் இல்லை. புறப்பட்டு விட்டான்.

வாழ வகையில்லாத அவனுக்கு வானுலக வழி புரியவில்லை. கதை கேட்டதால் ஒரே பலன் மட்டும் ஏற்பட்டது. தற்கொலை என்ற எண்ணத்தை அந்தப் 'புண்ணியவான்'தான் கந்தன் மனத்தில் உண்டாக்கினார்.

தற்கொலை

தற்கொலை

தற்கொலை—அதை ஏன் பாவச் செயல் என்று சொல்லவேண்டும்? "ஒவ்வொருமனிதனும் சமூகத்துக்குச் சேவை செய்யவே இறைவனால் படைக்கப்படுகிறான். எனவே பிறந்துவிட்ட எவனும் தானே தற்கொலை செய்துகொள்ள உரிமை கிடையாது........" என்று கதைக்காரர் சொன்ன வாதம் அவன் மனத்தில் எழுந்தது.

'அவனைப் பொறுத்த வரையில் சமூகத்துக்குப் பாடுபடத் தயார்தான். உழைப்புக்கு அஞ்சி ஒதுங்கும் இயல்போ,

உழைப்பை மற்றவர் தோளிலே எறியும் 'பெருந் தன்மை'யோ அவனுக்குக் கிடையாது. உடல் உள்ளவரை, உடலில் வலிமை உள்ளவரை உழைப்பதற்கு அவன் தயார் தான். ஆனால், அவனை ஏற்றுக்கொள்ள இல்லை இல்லை—அவன் உழைப்பை ஏற்றுக் கொள்ளச் சமூகம்தான் தயாராக இல்லை.

'உழைத்தால்தான் உணவு' என்கிறது சமூகச் சட்டம். அவன் உழைக்கத் தயார்; ஆனால் உழைப்பில்லை. உணவும் கிடையாது' என்கிறது சமூகம். 'அதோ அந்த மாடி வீட்டார்மட்டும்.........?' என்று ஒரு மெல்லிய குரல் அவன் மனத்திலே எழுகிறது. உடனே 'விதி' என்று ஒரு பெருங்குரல் எழுந்து அதை விழுங்கிவிடுகிறது.

கந்தன் படித்தவனல்ல—'சத் விஷயங்கள்' கேட்டவனுமல்ல. அவன் மனத்திலே இப்படியெல்லாம் கேள்விகள் எழுந்தன. பயன் என்ன? ஒரே குழப்பந்தான்.

தற்கொலை! தற்கொலை!—அதை ஏன் பாவச் செயல் என்கிறார்கள்? தற்கொலை செய்கிறவன் சாமிக்குத் துரோகி என்கிறார்களே, ஏன்?

3

நீதி மன்றம்.

சமூகத்திலே அநீதி நிகழ்ந்துவிடாமல் பாதுகாவல் புரிவதற்காக அரசாங்கத்தார் ஏற்படுத்திய நீதி மன்றத்திலே கந்தன் குற்றவாளிக் கூண்டிலே நிற்கிறான்.

சர்க்கார் தரப்பு வக்கீல் கையை வீசி வீசி வாதாடுகிறார். கந்தன் செய்தது தப்பு என்பதை நிறுவுவதற்காக அவர் இவ்வளவு அரும்பாடுபட வேண்டியதே இல்லை.

இருந்தாலும் அவர் பெரிய வக்கீல். வெறும் சட்டம் பேசுவதோடு நிற்கலாமா ?

" ஒவ்வொரு மனிதனுக்கும் சமூகத்தில் கடமை உண்டு. ஒவ்வொரு மனிதனும் சமூகத்தின் அங்கமாவான். எனவே, சமூகத்தின் அங்கமாகிய எந்த மனிதனும் தன் கடமையை ஆற்றாமல் தற்கொலை செய்துகொள்வதென்பதை அறிவுள்ள எந்த அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளாது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால் தற்கொலை செய்பவன் ஒவ்வொருவனும் சமூகத் துரோகி ஆவான்".

இது சுருக்கந்தான். அந்தச் சட்டம், இந்தச் சட்டம் என்று சட்டப் பெயர்களோடு, பள்ளிக்கூடத்தில் தமக்கு உதவி புரியாத கணக்குப் புத்தகத்தின் எண்களைப் பழி வாங்க நினைத்து அவற்றையும் சேர்த்து விளக்கினர்; விரிவாக விளக்கினர். ஒருவாறாக அவராகவே முடித்து அமர்ந்து விட்டார்.

நீதிபதி கந்தனைப் பார்த்துக் கேட்டார் :

"என்னப்பா, நீ ஏதாவது சொல்ல வேண்டுமா ?"

" ஒண்ணும் இல்லீங்க"

" நீ செய்தது குற்றந்தானா ?"

" ஆமாங்க"

" என் செய்தாய் ?"

" எனக்கு ஒண்ணும் புரியலீங்க. உழைச்சுப் பிழைக்க ஊரிலே வழி இல்லேண்ணு இங்க வந்தேனுங்க. இங்கேயும் அப்படித்தானுங்க........"

" அதெல்லாம் கேட்டதார்....."

"சரிதாங்க. வயித்துக்கு இல்லீங்க; கிடைக்கவும் வழி இல்லீங்க. சரிதான், இன்னமே இங்கே நமக்கு வேலே இல்லேன்னு........."

"தற்கொலே செய்து கொள்ளப் பார்த்தாயோ?"

"ஆமாங்க."

"ஏண்டா, உன் மனைவி மக்கள்........."

"ஐயோ சாமி, அந்த நெனவு எனக்கு என்னத்துக்குங்க? பாசம் கிடக்குது பாதாளம் வரையிலும். இருந்தாலும் என்னங்க? பணமும் பறக்கையும் இல்லாதவனுக்கு அந்த நெனவெல்லாம் என்னத்துக்கு?"

"அவர்கள் பிழைப்பு என்ன ஆகிறது?"

"எம் பொளப்புத்தான் அவங்களுக்கும்"

"அட, பாவி......"

4

திண்ணென்ற சிறைக் கதவு மூடிற்று. கந்தன் கைதி. அவன் சிந்தனைக் கதவு திறந்தது. எழுந்தது ஒரு கேள்வி:

"சமூகத் துரோகி......! யார்? வக்கீல் ஐயர் சொன்னாரே! நானு துரோகி?"

சர்க்காருக்கு அவன் உயிர்மேல்தான் எவ்வளவு அக்கறை? சமூகத்துக்குத் துரோகம் செய்துவிடாமல் அவனைக் காப்பாற்றிவிட்ட சர்க்கார் மிகவும் திறமை உள்ளதுதான்!

கந்தன் அடைபட்டுக் கிடந்தான். அவனுடைய 'கூண்டில்' மேல் உத்தரத்தில் இரண்டு குருவிகள் பேசிக்கொண்டன. கந்தன் நினைத்தான்:

"வாழ வைக்கத்தான் வகையில்லே; சாக விடவும் இந்தச் சர்க்காருக்கு ஏன் மனமில்லே?"

சென்னைத் தீர்மானம்

"இம்மாபெருங்கூட்டம்,

தமிழர் திருநாளாகிய இன்று எல்லாத் தமிழ் மக்களுக்கும் வாழ்த்துக் கூறுகிறது; சிறப்பாக, திருவிதாங்கூர்த் தமிழகம், பிரஞ்சிந்தியத் தமிழகம் ஆகிய இடங்களில் சுயநிர்ணய உரிமைக்காகத் தமிழர் நடத்தும் போராட்டத்துக்கும், தமிழகத்துக்கு வெளியே இலங்கை, மலேயா, பர்மா, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் உள்ள தமிழர்கள் உயிர்நாடியான உரிமைகளுக்காக நிகழ்த்தும் வீரம் மிக்க போராட்டத்துக்கும் ஆசி கூறுவதுடன் அவர்களுக்கு எல்லாவிதத்திலும் ஆதரவு நல்குமாறு தமிழ் நாட்டாரைக் கேட்டுக்கொள்கிறது;

இப்போது டெல்லியில் நடந்துவரும் அரசியல் நிர்ணய சபை மொழிவாரி நாடுகளைப் பிரிக்கும் வேலையை உடனடியாகச் செய்யவேண்டுமென்று வலியுறுத்துவதுடன், அப்படிப் பிரிக்குங்கால் திருப்பதிமுதல் குமரிவரை உள்ள நிலப்பரப்பைக் கொண்ட புதிய தமிழகத்தை நிறுவப் பாடுபடுமாறு அ. நி. சபையின் தமிழ்நாட்டு அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறது; அந்தப் புதிய தமிழகத்தின் அரசியல் அமைப்பை வேறு எவர் தலையீடுமின்றித் தாமே வகுத்துக்கொள்ளத் தமிழருக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை உறுதிப்படுத்துகிறது;

இந்தச் சுயநிர்ணயத்தின்வழியே தமிழகத்தின் அரசியல் அமைப்பை வகுக்குங்கால் அது சோஷலிசக் குடியரசாக அமைய வேண்டுமென்று விரும்புகிறது;

மேற்சொன்ன உரிமைகளை அடைவதற்காக ஒன்றுபட்டு உழைக்கவேண்டுமென்று தமிழினத்தார் யாவரையும் கேட்டுக்கொள்கிறது."

மடலைமயில் ரகங்கள்!

டி. கே. சி.

[தமிழ் உலகில் ரசிகமணி டி. கே. சி. அவர்களுக்குத் தனி இடம். அப்படியே அவருடைய போக்கு, நடையாவும் ஒரு தனித்தன்மை வாய்ந்தன. பலருக்கு அவருடைய நடை பிடிக்காமல் போகலாம். ஆனால் பாடலை அனுபவிக்கும் வழியெல்லோருக்கும் துலங்கிவிடும்.—ஆசிரியர்]

கவியின் உண்மைப் பண்பை அறிய முயன்ற மேலை நாட்டு ஆசிரியர் சிலர், கவி என்பது மிக அரிய வஸ்து, சாதாரணமாக எங்கும் காணக்கூடியதல்ல, அபூர்வமாகச் சில நாடுகளில்தான் காணப்படுகிறது என்று சொல்லிவிட்டுக் கவியைக் காணவேண்டுமானால் தமிழில் காணவேண்டும், தமிழை விட்டுவிட்டால் கிரேக்க பாஷையில்தான் காணலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ் அகராதிக்கு, ஆதி கர்த்தாவான டாக்டர் வின்ஸ்லோ எத்தனையோ பாஷைகளைக் கற்ற நிபுணர். அகராதியின் முன்னுரையில் என்ன சொல்லுகிறார் அவர்?

"நீங்கள் நம்பமாட்டீர்கள். நான் ஏதோ ஒன்றைப் பத்து நூறாய்ச் சொல்லுகிறேன் என்று எண்ணலாம். ஆனால் நான் சொல்லுவது முற்றிலும் உண்மையே:

தமிழ்ப் பாஷையானது அதன் கவி உருவத்தில் கிரேக்க பாஷையைவிடத் துள்ளியமாகவும் பண்பட்டதாகவும் இருக்கிறது. சந்தேகம் இல்லை."

இந்த வார்த்தை, தலைவலி கொடுக்கும் வெற்றுரையான தமிழ்ச் செய்யுள்களோடு கட்டிப் புரண்டு கஷ்டப்

பட்டுக்கொண் டிருக்கிறவர்களுக்கு விளங்காதுதான். பேரா சிரியர் குரோஸி சொன்ன பிரகாரம் வேண்டாத படிப் பைப் படித்துக் கெட்டுப்போகாத இயற்கைப் பண்பிலுள்ள மக்களுக்குக் கவி எளிதில் விளங்கிவிடும். மேலே சொன்ன தெல்லாம் உண்மைதானு என்று பார்க்கலாம் ஒரு கவியை வைத்து.

சேரநாடு மலைவளம் நிறைந்த காடு. மிளகு (கறி) அந்த மலைகளில்த்தான் விளையும். பூ என்றால் ஓரே காடுதான். மலையில் எங்கே போனாலும் சுகமான வாசனை (வெறி) கம கம என்று கமழும்.

இத்தகைய வளமான, அழகான, சுகமான மலையிடையே உள்ள ஊரில் ஒரு பெண். அவள் ஒருநாள் ஊருக்குப் பக்கத்தேயுள்ள காட்டில்ப் பூக்கொய்துகொண் டிருக்கிறாள்.

அப்போது அந்தப் பக்கமாகச் சேர மன்னன் வர நேர்ந்தது. அவனுடைய கண்ணும் பெண்ணின் கண்ணும் சந்தித்தன. அது காதல்ப் பார்வையாய் முடிந்தது.

ஆனாலும் அரசன் அப்படியே நடந்து அரண்மனைக்குப் போய்விட்டான். பிறகு அதைப்பற்றிச் சிந்தித்த பாடாக வும் இல்லை.

பெண்ணின் பாடோ பெரும் பாடாகப் போய்விட்டது. காதலனையே எண்ணிக்கொண் டிருக்கிறாள். பார்த்த பார்த்த இடமெல்லாம் அவனது மோக உருவந்தான் நிற்கிறது. உறக்கமே இல்லை. சாப்பாடோ ஏற்கவில்லை; தேகம் மெலிவு அடைந்துவிட்டது; கண் ஏதோ ஒன்றை வெறித்துப் பார்த்தாற்போ லிருக்கிறது. இதை எல்லாம் அன்னை பார்த்தாள்.

அருமை மகளை ஏதோ தேவதை வந்தல்லவா படுத்து கிறது என்று எண்ணினாள். முருகக் கடவுளுக்குத்தான்

கோபம்போ லிருக்கிறது, எதற்கும் சாமிகொண்டாடியை (வேலனை—வேலைக் கையில் ஏந்திய வண்ணமாய் ஆடுகிற வனை) அழைத்து முருகக் கடவுளுக்குக் கொடைகொடுத்து சாமியாடச் செய்வோமே. அவனுக்கு ஆவேசம் வரும், கோளாறு இன்னதென்று தெரிந்து பரிகாரமும் சொல்வான் அல்லவா—என்று சொல்லி வேலனை அழைத்துவர ஆள் விட்டாள். பிறகு தன் வேலையைப் பார்க்கப் பின்கட்டுக்குப் போய் விட்டாள்.

இவ்வளவு காரியத்தையும் மகளும் பார்த்துக் கொண்டே இருந்தாள். சிறிது நேரம் கழித்துத் தோழி ஒருத்தி அவளைப் பார்க்க வந்தாள்.

புது வளையல்களை அடுக்கிக்கொண்டு சிலுக்கு, சிலுக்கு என்ற சப்தத்தோடு வந்தாள்.

தோழியைப் பார்த்து "பலே பேஷ்! வளையல்கள் வெகு அழகு, அதைவிட ஜோர் அவைகள் செய்கிற சப்தம்" என்ற முறையில் வயவேற்றுக் காரியத்தைப் பற்றிப் பேச ஆரம் பிக்கிறாள்.

"அன்னை செய்கிற காரியத்தைப் பற்றிச் சிரித்துத் தொலையாதுபோலிருக்கிறதே!"

"இறைவளை நல்லாய்!
இதுநகையா கின்றே!
கறிவளர் தண்சிலம்பன்
செய்தநோய் தீர்க்க
அறியாள்மற்று அன்னை:
அலர் கடம்பன் என்றே
வெறியாடல் தான்விரும்பி
வேலன் வருகென்றாள்."

இந்த விதமாக அன்னையின் பைத்தியக்காரத் தனத்தைப் பற்றிப் பேசிவிட்டுச் சிறிது நேரம் மௌனமாய் இருந்தாள். மௌனமாக எவ்வளவு நாழிகைதான் இருக்க முடியும்? மறுபடியும் பேச ஆரம்பிக்கிறாள். தோழியின் கையில் நெருங்கிக் கிடக்கும் வளையல்களைத் தொட்டுப் பார்த்த வண்ணமாய் :—

செறிவளைக்கை நல்லாய்!
இதுநகையா கின்றே!
வெறிகமழ் வெற்பன்நோய்
தீர்க்கவரும் வேலன் ;—
வேலன் மடவன் :
அவனினும் தான்மடவன்
ஆலமர் செல்வன்
புதல்வன் வரும் ஆயின்

[இறை வளை: கையில் வளையல்களை அணிந்த; நல்லாய்: பெண்ணே; இது நகையாகின்றே: இந்த விஷயம் நன்றாய்ச் சிரிக்கவேண்டிய காரியந்தான்; கறிவளர் தண் சிலம்பன்: மிளகுக் கொடி படரும் குளிர்ந்த மலைப் பிரதேசங்களுக்கு அரசனான சேர மன்னன்; செய்த நோய் தீர்க்க: என்னிடம் விளைத்த காதல் நோயைத் தீர்ப்பதற்கு; அறியாள் மற்று அன்னை: எனக்குத் தெரியும், ஆனால் அன்னைக்கு எப்படித் தெரியும்; வெறியாடல் தான் விரும்பி: சாமியாடச் செய்யவேண்டும் என்பதாக எண்ணி; வேலன் வருக என்றாள்: சாமி கொண்டாடியைக் கூப்பிட்டு விட்டாள்:

செறிவளைக்கை நல்லாய்: நிறைபு வளையல் அடுக்கிய கை கொண்ட தோழியே; வெறிகமழ் வெற்பன் நோய்: பூமணம் கமழும் மலைக்கு அரசனான சேரன் செய்த காதல்

நோயை; தீர்க்க வரும் வேலன்: தீர்ப்பதற்காகச் சாமிகொண்டாடி ஒழுங்காய் வந்துவிடுவான்; வேலன் மடவன்: அப்படி வரும் வேலன் மடையன் தான்; அவனினும் தான் மடவன்: அந்த வேலனைவிட மடையன்; ஆல் அமர் செல்வன்: கல்லாலின் கீழ் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானது; புதல்வன்: மகனான முருகக் கடவுள் தான்; வரும் ஆயின்: அந்த வேலனிடம் ஆவேசமாக வந்துவிட்டால்]

காதலின் வேகத்தைக் கவி எவ்வளவு தெளிவாய்க் காட்டுகிறது பாருங்கள். ஒரு நயமான நாடகமே நம் கண் முன் நடக்கிறது. தமிழ்ப் பாஷையின் அழகிய நடன கதி எவ்வளவு அற்புதமாய் இருக்கிறது!

வேலன் மடவன்;
அவனினும் தான் மடவன்
ஆலமர் செல்வன்
புதல்வன் வரும் ஆயின்!

காதலுக்கு ஆளான பெண், அவளது ஆத்திரம், எரிச்சல், தமிழின் இசை தாளங்கள் எல்லாம் மனசில் நின்று கொண்டே இருக்கும். போன போன இடமெல்லாம் நம் உடனேயே வரும்.

பாடல் மிகப் பழைய பாடல், சிலப்பதிகாரத்தில் குன்றக்குரவையாகப் பதித்து வைத்திருக்கிறது. எப்படியோ பாடல் கிடைத்துவிட்டதல்லவா நமக்கு!

புதிய பார்வை

"பாமரன்"

- பிறரது உழைப்பின் பலனைத் திருடி லட்சக் கணக்கில் பொருள் சேர்ப்பவனுக்குப் பட்டம் லட்சாதிபதி.

*　　*　　*　　*

- அந்தத் திருட்டையே திறமையாக நடத்திக் கோடிக் கணக்கில் பொருள் சேர்ப்பவனுக்குப் பட்டம் கோடீஸ்வரன்.

*　　*　　*　　*

- பல கோடி மக்களின் உழைப்பைத் திருடி எல்லை யற்ற பொருள் சேமிப்பவனுக்குப் பட்டம் பிரபு.

*　　*　　*　　*

- பொருளோடு புகழையும் விரும்பி அற்பக் காசு களைத் தானம் என்ற பெயரால் திருடிய இடத் திற்கே திருப்பிக் கொடுப்பானாயின் அவன் பெயர் வள்ளல்.

*　　*　　*　　*

- உழைப்பாளியின் அறிவை யழித்து ஆண்மையை நசுக்கி அடிமைகொள்ளும் கொடியவனுக்குப் பட் டம் எசமான்

தமிழன் - அன்றும் இன்றும்—௫

அ. ச. ஞானசம்பந்தம்

இயற்கையினால் உண்டாகும் மழைநீரை மட்டும் நம்பித் தமிழன் வாழவில்லை. அங்ஙனம் வாழ்ந்திருப்பின் நாடு செழிப்புடன் இருக்கவும் முடியாது. ஆகவே, ஆறுகள் பலவற்றைத் தனது முயற்சியால் உண்டாக்கினான். குளங்களும் ஏரிகளும் அவனது விடாமுயற்சியின் அடையாளங்களாக இன்றும் உள்ளன. இருநூறுவருட ஆங்கில ஆட்சியாற் பெற்ற பயன், நீரில்லாத ஆறுகளும் காய்ந்துபோன குளங்களுமேயாம். ஆனால் காவிரியும், வைகையும், தாம்பிரவருணியும் தமிழன் முயற்சியின் சிகரங்கள். காவிரியைப் பற்றிப் பட்டினப்பாலை,

"வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத்தலைஇய கடற் காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும்"—என்று கூறுகிறது.

அது மழைவளங்குறையினும் தான் நீர் குன்றாது பொன்னை வாரிக் கரையில் எற்றும் தன்மையுடைய ஆறு.

வைகையைப் பெண்ணாக உருவகப்படுத்துகிறார், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகார ஆசிரியர்:

"விலங்கு நிமிர்ந் தொழுகிய கருங்கயல் நெடுங்கண்
விரைமலர் நீங்கா அவிர்அறற் கூந்தல்
உலகுபுரந் தூட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப்
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி"

இத்தகைய நீர்வளமுடைய நாடாக இருப்பினும் தமிழ் மன்னர் சும்மா இருந்து விடவில்லை. ஆறுகள் செல்லா

விடங்களில் குளங்கள் வெட்டினர் எனப் பட்டினப்பாலை கூறுகிறது. 'குளந்தொட்டு வளம் பெருக்கி' (ப. பா. 284.) 'நிலனெளி மருங்கில் நீர்நிலை பெருகத் தட்டோர்' (புறம் 28.) நாட்டில் நீர்வளம் மிகும்படியாகக் குளந்தோண்டியவரே சிறப்புடையர் என மேற்காட்டிய புறப்பாடல் கூறுகிறது. எனவே இத்தகைய அருமைப்பாட்டோடு தமிழ் நாடு செழித்திருந்தது. இவ்வளவு வளம் பொருந்திய நாட்டில் வறுமை ஏற்படுவதே அரிது. ஒரு வேளை இயற்கையின் கோளாறுகளால் மழை கெட்டுப் பஞ்சம் வந்தால் அதற்கும் அரசனே காரணம் என மக்களும் அரசனும் நினைத்தனர். தற்காலத்தில் வாழும் நமக்கு ஒருவாறு இது வியப்பாகவும் இருக்கும். ஆனால் பழந்தமிழ் மன்னன் மழை வளம் முதலியன குறையாதிருப்பது தன் செங்கோல் நலத்தால் என்று நினைத்தான்.

" மழைவளங் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழைபுயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்
குடிபுரவு உண்டுங் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதகவு இல் "

(சிலம்பு—காட்சி—100)

[நாட்டில் மழை வளங்குறையினும், உயிர்களுக்கு வேறு எத்தகைய துன்பம் வரினும், செங்கோல் பிழையாமல் ஆட்சி செய்யும் மன்னர் குடியில் மகனாய்ப் பிறத்தல் பெருந் துன்பமே யல்லது, விரும்பத்தக்கது அன்று.]

இவ்வரிகள் அரசன் தன் வாழ்க்கையை எவ்வாறு நினைத்தான் என்பதை அறிவிக்கும். மன்னர்களாகப் பிறந்தது பிறர் பொருளைச் சுரண்டிச் சுகமடைவதற்காகவே என்று நினைக்கும் இந்நாளில், இவ்வரிகள் சிறிது மனச்

சாந்தியை அளிக்கின்றன. மேலே கூறிய இவை நீங்க ஏனைய துன்பங்களும் வராமல் தமிழ் மன்னர் காத்து வந்தனர்.

நாகரிகம் மிகுந்துள்ள இந்நாளில் கொலையும் கொள்ளையும் எல்லையற்று நடைபெறுகின்றன. ஆனால் அந்நாளில் அவ்வாறில்லை என அறிகிறோம். போக்கு வரவுச் சாதனம் குறைந்திருந்த அப்பொழுதுகூட மன்னர் ஆணை மூலை முடுக்குகளிலும் நடைபெற்று வந்தது. அரசன் எங்கிருப்பினும் அவன் ஆணை எங்குஞ் சென்று உலகைக் காப்பதாக இன்றும் ஏட்டில் எழுதி இருக்கக் காண்கிறோம். அரசனைத் தம் வாழ்நாளில் கண்டிராத பலரும் அவன் ஆணை நன்கு நடைபெறுமாறு உதவி செய்கின்றனர். இக்கருத்தைப் பிற்காலத்து வந்த சிந்தாமணி ஆசிரியர் நன்கு எடுத்துக் கூறுகிறார். "உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி, கறங்கு தெண்டிரை வையகம் காக்குமால்" அரசன் உறங்கிக் கொண்டிருப்பினும் அரசநீதி வழுவாது நடைபெறும் என்பதே இதன் பொருள். இது போலவே பழந்தமிழ் நாட்டில் ஆட்சி நிலவியதெனச் சங்கநூல்கள் முழங்குகின்றன.

தொண்டைமான் இளந்திரையன் என்ற மன்னன் ஆண்ட நாட்டைப் பற்றிப் பெரும்பாணாற்றுப் படையில் பின்வருமாறு கூறப்படுகிறது:

"அத்தஞ் செல்வோர் அலறத் தாக்கிக்
கைப்பொருள் வௌவுங் களவேர் வாழ்க்கைக்
கொடியோ ரின்று(அ)வன் கடியுடை வியன்புலம்
உருமும் உரறு(து) அரவுந் தப்பா
காட்டுமாவும் உறுகண் செய்யா" (பெ. பா404.)

[வழியிடைச் செல்வோர் வருந்தப் புடைத்து அவர் கைப்பொருளைத் திருடும் மக்கள் அவன் நாட்டில் இல்லை. மேலும் வனவிலங்குகளும் பாம்புகளும்கூட அவன் நாட்டில் துன்பஞ் செய்தலில்லை.]

இம்மட்டோ? ஊர்க்காவல் செய்யும் பாதுகாப்புப் படைஞர் நீண்ட வழிகளிலும், கவர்த்த வழிகளிலும் நின்று வியாபாரப் பொருள்களின் போக்குவரத்துக்குத் துன்பம் ஏற்படாவண்ணம் காவல் புரிகின்றனர். அவர்கள் எத்தகையவர்கள்? ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகிறார்:

"கடம்பமர் நெடுவேள் அன்ன மீளி
உடம்பிடித் தடக்கை ஓடா வம்பலர்
உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன்காடு..."

(பெ. பா. 75—78)

[கடப்பம்பூமாலை அணிந்த முருகனைப் போன்ற எஃகுடனும், நீண்ட கைகளும் உடைய (போலீஸ்) வீரர்கள், சுங்கம் வசூலிக்கும் வழிகளிலும் நீண்ட பெருவழிகளிலும் நின்று காவல் புரிகின்றனர்.] இவர்களிற் பலர் அரசனைக் கண்டிருக் காவிடினும் அவன் கொற்றம் நன்கு நடைபெற உதவுகின்றனர். இத்தகைய மாட்சிமையுடைய நாட்டில் தமிழன் வாழ்ந்தான். ஆதலால் அவனது நாட்டில் ஒரு வேலி நிலம் ஆயிரங் கலம் விளைவதாக விருந்தது.

இதுவரை கூறியவற்றைக் கொண்டு பழந் தமிழன் பயிர்த்தொழில் ஒன்றுமே கொண்டு வாழ்ந்தான் என்று நினைத்து விடுதலாகாது அந்நாளில் தமிழ் நாடு வாணிகத்தில் சிறந்த நாடுகளில், தலையாய நாடாக விருந்தது. அவர்களது வாணிகச் சிறப்பைக் குறிக்கத் தமிழ் நூல்களையன்றி ஏனைய நூல்களும் சான்று பகரும். பிளினி என்ற பெரியாரது நூலும் கிரேக்க சரித்திரமும், வான்மீகி இராமாயணமும் வேண்டிய அளவு தமிழ் நாட்டின் வாணிகத்தைப் பேசுகின்றன. இன்றும் கொற்கை, காயல்பட்டினம் போன்ற

கீழ்க்கடற்கரைப் பட்டினங்களிலும், முசிரி போன்ற மேலைக் கடற்கரைப் பட்டினங்களிலும் பழைய உரோமதேசக் காசுகள் அகப்படுகின்றன. தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியான முக்கியப் பொருள்கள்—முத்து, பவழம், மிளகு, உணவுப் பொருள்கள், அரிசி, மயில் தோகை என்பவையாம். இன்றும் கிரேக்க மொழியில் காணப்படும் 'ருஷ்' என்ற சொல்லும் 'தூஹ்' என்ற சொல்லும் முறையே அரிசியையும், தோகையையும் குறிக்கும் வடிவுமாறிய தமிழ்ச் சொற்களாம். கி. மு. 55-ல் வாழ்ந்த உரோமாபுரிச் சக்கரவர்த்தி 'மார்க்கஸ் அரேலியஸ்' என்பார் "உரோமர்கள் தங்கள் ஆடம்பர வாழ்க்கையைத் திருப்தி செய்துகொள்வதற்காகத் தமிழ் நாட்டிலிருந்து முத்துக்களை வரவழைக்கிறார்கள். அதற்காக அவர்கள் அனுப்பும் பொன் எண்ணிலடங்காது" எனக் கூறி இருக்கிறார். சிறிது காலம் தமிழ் நாட்டிலிருந்து முத்து இறக்குமதி செய்யப்படக்கூடாதென்ற சட்டமும் உரோமாபுரியில் அமுலில் இருந்து வந்தது. இம்மட்டோடு அவர்கள் ஆடம்பரவாழ்க்கை நிற்கவில்லை. உயிர்ப் பொருள்களாகிய கிளி, குரங்கு, மயில் முதலியவற்றையும் தமிழ்நாட்டிலிருந்து இறக்குமதி செய்தனர். முத்துக் குளிப்பதிலும் சிறந்த முத்துக்களைச் சேகரிப்பதிலும் பாண்டி நாட்டார் உலகப் புகழ் பெற்றவர். பிளினியின் வாக்கின்படி, மரக்காலால் அளந்து மூலைகளிற் குவிக்கும்படியான அவ்வளவு முத்துக்கள் பாண்டி மன்னனிடம் இருந்தன. எல்லா நாட்டினரோடும் தமிழர் வியாபாரஞ் செய்யினும், சிறப்பாக யவனர், கிரேக்கர் இவர்களுடன் அதிகத் தொடர்புகொண்டு வியாபாரஞ் செய்தனர் என அறிகிறோம். காவிரிப்பூம்பட்டினம், மதுரை போன்ற தலைநகரங்களில் யவனர்களும், கிரேக்கர்களும் குடும்பங்களோடு வந்து தங்கி வாழ்ந்தனர்

என்றும் அறிய முடிகிறது. தங்கி வாழ்ந்த அவர்கள் தங்கள் மொழியையே பேசிவந்தமையின் இப்பட்டினங்கள் பலமொழி வழங்கும் ஊர்களாயின." மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப் புலம்பெயர் மாக்கள் கலந்தினிதுறையும் முட்டாச் சிறப்பிற் பட்டினம்"—[ப. பா. 217] என்ற பட்டினப்பாலை அடிகள் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. யவனர்கள் சிறப்பாகக் குதிரைகளையும், சாராயத்தையும், இங்கு இறக்குமதி செய்துவிட்டு அவற்றுக்குப் பதிலாக அணிகலன்களையும் முத்துக்களையும் ஏற்றுமதி செய்து சென்றனரென மதுரைக் காஞ்சியால் தெரிகிறது.

" நனந்தலைத் தேயத்து நன்கலன் உய்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியோ டனைத்தும்
வைகல் தோறும் வழி வழி சிறப்ப— (ம. கா. 322)

அட்டைப் படம்

'முரசு' அட்டைப் பக்கத்தில் காட்சியளிப்பவர்
திருவாளர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்.

பல நூற்றாண்டுகள் அடிமைப்பட்டு அடங்கி வாழ்ந்த தமிழர், கடந்த பொங்கல் நாளன்று 'வேறு எவர் தலையீடுமின்றித் தமிழகத்தில் சோஷலிசக் குடியரசை அமைத்தே தீருவோம்' என்ற பிரதிக்கினையை மேற்கொண்டார்களல்லவா? சரித்திரத்தில் இடம் பெறத்தக்க அந்தக் கூட்டத்தில் தலைமை தாங்கியதுடன் மேற்சொன்ன பிரதிக்கினைத் தீர்மானத்தைத் தாமே பிரேரேபித்தவர். இவர் மட்டுமல்லாமல் இவரது குடும்பமே தேசபக்தி வாய்ந்தது. 1942-ல் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் சட்டத்தை மீறிச் சிறை புகுந்தார். சென்னை நகர சபையில் பல ஆண்டுகள் உறுப்பினரா யிருந்து அரும் பணிகள் பல ஆற்றினார். இவரது தலைமையில் துவக்கப்பெற்ற தமிழ்க் குடியரசு இயக்கம் விரைவில் வெற்றி பெறுவதாக,

முத்தமிழ் நிலையப் புதிய வெளியீடுகள்

1. தமிழர் யார்? அணா 8
2. ஆரியர் தமிழர் கலப்பு 8
3. ஆரிய வேதங்கள் 10
4. தமிழ்—பழமையும் புதுமையும் 8
5. மரணத்தின் பின் 8
6. சமணமும் சைவமும் 8
7. தமிழர் சமயம் எது? 8
8. இராவணன் வித்தியாதரனா? 8
9. நடன சுந்தரி ரூ. 1
10. பெண்களின் உலகம் அணா 14
11. நாடகக் கலை மலர் ரூ. 2
12. உலகக் கலை உயர்வுக்கு உதவியவர் யார்? அ. 8
13. ஏ, தாழ்ந்த தமிழகமே 8
(சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.) அவர்கள் பேருரை)
14. இராவண காவியம் ரூ. 6
(பாரதிதாசன் சிறப்புப்பாயிரம், சி. என். அண்ணாதுரை, எம்.ஏ. விரிவான முன்னுரை)

முத்தமிழ் நிலையம்

75, வரதா முத்தியப்பன் தெரு,

சென்னை—1.

Demand

PRABHAT INK

High Grade

for Fountain Pens

Available From

PRABHAT TRADERS

Stationers, General Merchants, Importers & Exporters

4 & 5, Badrian Street, G. T., Madras.

Tele:—PRABAKAR, Madras.

Branches at :

KUMBAKONAM, TINNEVELLY.

மதிப்புரை

கோவில்களை மூடுங்கள் :

[ஆசிரியர் : கோரநாதன் வெளியிட்டோர். சாந்தி நிலையம்,
துறையூர், திருச்சி. பக்கம் 38. விலை அணா எட்டு]

ஆலயப் பிரவேசம் என்று ஒரே அமளியாய் இருக்கிற இந்தக் காலத்தில் கோயில்களை மூடுங்கள் என்று குரலெடுக்கிறார் கோரநாதன். 'சிந்தனையின் செந்தீ' என்று இந் நூலைப்பற்றிய ஒரு விளம்பரம் கூறுகிறது. கருத்தில் வேறுபடலாம்; எழுத்தில் உள்ள வேகத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. கொள்கைக் கேற்ற நடை; நடைக் கேற்றபடி ஆசிரியரின் (புனை) பெயர்.

பட உலகில் கடவுள்கள் :

[ஆசிரியர் : கோரநாதன். வெளியிட்டோர்: எரிமலைப் பதிப்பகம்,
துறையூர், திருச்சி. பக்கம் 32. விலை அணா நான்கு]

தமிழ்ப் பட உலகினைப்பற்றி இந்நூலாசிரியர் கூறும் தீர்ப்புகளைப் பெரும்பாலும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

அந்தமான் கைதி (நாடகம்)

[ஆசிரியர் : கு. சா. கிருஷ்ணமூர்த்தி. வெளியிட்டோர்: தமிழகம்,
புதுக்கோட்டை. பக்கம் 150. விலை ரூ. இரண்டரை]

தமிழ் நாடக உலகுக்கு உயிரளித்து வரும் கலைச் செல்வர்களான டி. கே. எஸ். சகோதரர்களின் நாடக மேடைகளில் கண்டு களித்த நாடகத்தைப் படித்து இன்புறும் வண்ணம் நூல் வடிவில் தந்திருக்கிறார்கள். நல்ல நாடகம். படங்களோடு விளங்கும் இந்நூல் கருத்துக்கும் கண்ணுக்கும் நல்விருந்து. அச்சுப் பிழைகள் சற்றே அதிகம்.

இசை யின்பம் :

[ஆசிரியர் : கு. சா. கிருஷ்ணமூர்த்தி : வெளியிட்டோர்: தமிழகம்,
புதுக்கோட்டை. விலை ரூ. ஒன்றரை]

பாடல்கள் தமிழ் மொழியில் மட்டுமல்லாமல் தமிழ் வழியிலும் வேண்டும். அதற்கு இந் நூல் ஓர் எடுத்துக்காட்டு. இராக தாள விளக்கங்களோடு கூடிய 102-பாடல்கள் இந்நூலில் உள்ளன. அவற்றில் பெரும்பாலன தமிழ் மொழி, தமிழர் ஆக்கம் தேடுவன. பழங் கதை சொல்வதோடமையாமல் இன்றைய நிலையையும் எடுத்துக் காட்டி உணர்ச்சி யூட்டுகிறார் இவ் வாசிரியர். இத்தகைய முயற்சியில் ஈடுபட்டுத் தமிழினத்துக்கு இவ் வாசிரியர் சிறந்த தொண்டு செய்வாராக. அச்சும் அமைப்பும் அழகாக இருக்கின்றன. மறுபதிப்பில் நீக்க வேண்டிய அச்சுப் பிழைகள் சில உள்ளன.

துரோகி யார்? (நாடகம்)

[ஆசிரியர்: என். எஸ். பகவதி, வடிவீசுவரம், நாகர்கோவில் பக்கம் 94. விலை ரூ. ஒன்றரை]

சமூக நாடகங்கள் தமிழுலகுக்கு மிக மிகத் தேவை. இத்துறையில் கருத்தைச் செலுத்தியுள்ள இந்நாடக ஆசிரியரைப் பாராட்டுகிறோம். முயற்சி மேன்மேலும் ஓங்குவதாக.

கவிதைக் கதம்பம்

[ஆசிரியர்: 'ஜீவன்' கிடைக்கும் இடம்: இந்திரா நிலையம், புதுவயல். பக்கம் 84. விலை ஒரு ரூபாய் ஆறு அணா]

கவிதை முயற்சி நாளுக்கு நாள் பெருகி வருகிறது. இக் கவிதைக் கதம்பம் அதற்கொரு சான்று. தமிழகத்தில் நாடோடிப் பாடலாக வழங்கிவரும் தேசிங்கு ராஜன் கதையைப் புதிய சந்தங்களில் இனிமையாக வழங்கி யிருக்கிறார், இவ்வாசிரியர். இம் முயற்சியைத் தமிழர்கள் மிகவும் வரவேற்பார்கள்.

வரப்பெற்றோம்

புதுக்குரல்:

[கம்பதாசன்—'நிழல்', திருவல்லிக்கேணி, சென்னை. விலை பன்னிரண்டணா.]

கதிர்:

[மாதப் புத்தகம். பதிப்பாசிரியர்: நூர் முகம்மது, நஜ்மா பதிப்பகம், பிராட்வே, சென்னை. விலை எட்டணா.]

கைத்தொழில்:

[மாதப் புத்தகம். பதிப்பாசிரியர்: லோகநாதன். கைத்தொழில் பதிப்பகம், தங்கசாலைத் தெரு, சென்னை. விலை நாலணா.]

கலை மலர்:

[மாத வெளியீடு. ஆசிரியர்: 'கலைப் பித்தன்' கலைமலர் காரியாலயம், புதுக்கோட்டை. விலை. எட்டணா.]

●

மதிப்புரை விரும்புவோர் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும்

Edited & Published by M. P. Sivagnanam, at 238 Lingha Chetty Street Madras
Printed by K. C. Nagalingha Mudaliar at the Sengunthа Mithiran Press Madras

தமிழ் முரசு

(மாதம் இருமுறை)

உள்நாடு

ஆண்டுச் சந்தா	ரூ. 6—0—0
6 மாதச் சந்தா	ரூ. 3—0—0
தனி இதழ்	0—4—0

வெளிநாடு

ஆண்டுச் சந்தா	ரூ. 7—0—0
6 மாதச் சந்தா	ரூ. 4—0—0
தனி இதழ்	ரூ. 0—5—0

விவரங்களுக்கு எழுதுக:

தமிழ் முரசுப் பதிப்பகம்

திருவல்லிக்கேணி, சென்னை.

தினசரி உபயோகத்துக்கான ஸ்வாதிச் சரக்குகள்

1. ஸ்வாதி டேபிள் சால்ட்

குளிர் காலத்திலும் உலர்ந்திருக்கும் திறம் வாய்ந்தது.

2. ஸ்வாதி கூந்தல் தைலம் (மருத்துவத் தயாரிப்பு)

ஆயுர்வேத—ஆங்கில வைத்திய முறைகளைக் கலந்து தயாரித்தது. இளம் பருவ நரையையும், மயிர் உதிர்தலையும் தடுப்பது.

3. டென்டோமாக் (ஸ்வாதி மருத்துவப் பற்பொடி)

பல்லில் உள்ள ஊத்தை, காவி இவற்றைப் போக்க வல்லது. எயிற்றிலிருந்து இரத்தம் வடியாமல் செய்வதோடு, பயோரியா, பல்வலி இவற்றைத் தடுக்கும். துர்நாற்றத்தை அடியோடு அகற்றிவிடும்.

4. ஸ்வாதி நோவு மருந்து

தலைவலி, முடக்குவாத வலி, நரம்புச் சுளுக்கு இவற்றை நீக்க மலிவான மருந்து. செல்வருக்கும் வறியவருக்கும் ஏற்றது.

5. ஸ்கேபினல்

சிரங்கு, வெட்டுக்காயம், சுடுபுண், சொறி இவற்றுக் கேற்ற நன் மருந்தென்று புகழ்பெற்ற மருத்துவர் சிறப்பிப்பது.

6. ஸ்வாதியின் சைக்கிள் மார்க் பினைல்

உயர்தரமான கிருமி நாசினி; வலிய கந்தம் வாய்ந்த அழுக்கு நீக்கி.

ஸ்வாதி பிராடக்ட்ஸ் லிமிடெட்

P. B. 655, சென்னை